அரசின் நிதிக்கூற்றுக்கள் - 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பொது திறைசேரியின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரசின் நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களிலான/ மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அரசின் நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 15 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 15 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புகள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2025 மே 30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அரசின் நிதிக்கூற்றுக்களுக்கு உரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 ஒக்டோபர் 17 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, இதனுடன் சமர்ப்பிக்கப்படும் அரசின் நிதிக்கூற்றுக்களில் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரசின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு மூலதத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக அறிந்து கொள்வதற்காகவன்றி, உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு அல்ல.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளதாக,

(ஆ) கடந்த வருடத்திற்கு உரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் முன்வைக்கப்பட்டிருந்த பின்வரும் அவதானிப்புகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

பந்திக்கான தொடர்பு	பரிந்துரைகள்
1.7.1(அ)	கணக்கீட்டு மூல தத்துவங்களுக்கு இணங்க உரிமை மூலதனம்/ தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று தயாரிக்க வேண்டி இருந்தமை.
1.7.1(இ)	பயனர்களுக்கு சரியான தகவல்களை வெளிப்படுத்தும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்க வேண்டியிருந்தமை.
1.7.1(உ)	நிதிக்கூற்றுக்கள் பயனர்களுக்கு சரியான தகவல்களை வெளிப்படுத்தும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்க வேண்டியிருந்தமை.
1.7.1(ஊ)	கணக்கீட்டுக் கொள்கையின் அடிப்படையின் நிதிச் செயலாற்றல் கூற்றில் அறிமுகப்படுத்தப்பட்டமையால் கணக்கீட்டு மூல தத்துவங்களுக்கு இணங்க கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் கணக்கீடு செய்ய வேண்டி இருந்தமை.
1.7.1(எ)	-மேற்படி-
1.7.1(ஏ)	நிதிக்கூற்று கூறுகளை சரியான பிரகாரம் இனங்கண்டு உறுதிப்படுத்தியதன் பின்னர் மாத்திரம் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தமை.
1.7.1(ஐ)	-மேற்படி-

1.7.1(ஓ) கணக்கீட்டு மூலதத்துவங்களின் பிரகாரம் காசு பாய்ச்சல் கூற்று தயாரிக்க வேண்டி இருந்தமை.

1.7.1(ஓ) -மேற்படி-

1.7.1(ஔ) கணக்கீட்டு அடிப்படையில் தயாரிக்கப்படுகின்ற நிதிச் செயலாற்றல் கூற்றில் சீராக்க வேண்டியிருந்தமை.

1.7.1(கா) செலவின வகைப்படுத்தல் சரியாக மேற்கொள்ள வேண்டியிருந்தமை.

1.7.1(கி) மீதிகளைத் தீர்த்து வைப்பதற்காக விரைவாக நடவடிக்கை எடுத்து முறைமையை அபிவிருத்தி செய்ய வேண்டியிருந்தமை.

1.7.1(கீ) கணக்கீட்டு மூலதத்துவங்களின் பிரகாரம் காசு பாய்ச்சல் கூற்று தயாரிக்க வேண்டி இருந்தமை.

1.7.1(கு) அரச கடன் பெறுவனவு மற்றும் கடன் சேவை கணக்கீடு செய்தல் முறையாக மேற்கொள்ள வேண்டி இருந்தமை.

1.7.1(கூ) சகல கடன்களையும் கணக்கீடு செய்வதற்குரிய செலவினங்கள் சரியாக குறிப்பிட வேண்டி இருந்தமை.

1.7.1(கெ) கடன் கணக்கீடு செய்தல் கால எண்ணக்கருவிற்கு இணங்க மேற்கொள்ள வேண்டி இருந்தமை.

1.7.1(கே) கடன் பெற்று கைப்பற்றப்படுகின்ற சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்ய வேண்டி இருந்தமை.

1.7.1(கை) அரச கடன் பெறுவனவு மற்றும் கடன் சேவை கணக்கீடு செய்தல் முறையாக மேற்கொள்ள வேண்டி இருந்தமை.

1.7.1(கொ) அரச கடன் பெறுவனவு மற்றும் கடன் சேவை கணக்கீடு செய்தல் முறையாக மேற்கொள்ள வேண்டி இருந்தமை மற்றும் எதிர்பார்க்கப்பட்டவைகள் தாமதமடைவதை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்தமை.

1.7.1(கோ) கடன் பெற்று கைப்பற்றப்படுகின்ற சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்ய வேண்டி இருந்தமை.

1.7.1(கௌ) மறை கடன் பெறுமதி ஏற்பட்டதற்கான காரணம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டு அந்த மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்தமை.

1.7.1(ச) கடன் பங்களிப்பு நிறுவனங்களுடன் கடன் மீதியை தொடர்ச்சியாக இணக்கம் செய்ய வேண்டி இருந்ததுடன் தேவையான சீராக்கங்களை உரிய பிரகாரம் விசாரணை செய்யப்பட்டதன் பின்னர் மேற்கொள்ள வேண்டி இருந்தமை மற்றும் அதன் பிரகாரம் வெளிப்படுத்துதல்.

1.7.1(சா) அரச உரிமை உள்ள நிறுவனங்களுடன் கால ரீதியில் மீதி உறுதிப்படுத்தல்களைப் பெற்று மதிப்பீட்டுக்கு உட்படுத்தி உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கும் மற்றும் கணக்குகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல்.

1.7.1(சி) -மேற்படி-

1.7.1(சீ) அரச உரிமை உள்ள நிறுவனங்களுடன் கால ரீதியில் மீதி உறுதிப்படுத்தல்களைப் பெற்று மதிப்பீட்டுக்கு உட்படுத்தி உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கும் மற்றும் கணக்குகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல்.

1.7.1(சு) -மேற்படி-

1.7.1(சூ) -மேற்படி-

1.7.1(செ) சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல், அமைச்சின் கீழ் வருகின்ற பல்வேறு திணைக்களங்களுக்கு இடையே சிறந்த தொடர்பினையும் இணைப்பினையும் மேற்கொள்ளவதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் அதற்கு முரணாக செயற்படுகின்ற தரப்பினருக்கு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டி இருந்தமை.

1.7.1(சே) நிதிக் கூற்றுக்கள் பயனர்களுக்கு முக்கியம் வாய்ந்த தகவல்களை சரியான வகையில் வெளிப்படுத்த வேண்டி இருந்தமை.

1.7.1(சை) -மேற்படி-

1.7.1(சொ) -மேற்படி-

1.7 நிதிக்கூற்றுகள் தொடர்பான கருத்துரைகள்

1.7.1 அரசின் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் தொடர்பிலான கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	கணக்கீட்டு மூல தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட உரிமை / தேறிய மூலதன மாற்றங்கள் கூற்றில் காண்பிக்கப்பட்டுள்ள பொது நிதியத்தின் ஆரம்ப மீதியில் மீளாய்வாண்டின் மிகை அல்லது பற்றாக்குறை மற்றும் கடந்த கால ரீதியில் மேற்கொள்ளப்படுகின்ற ஏனைய சீராக்கங்கள் (Retrospective Adjustments) காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது தேறிய சொத்துக்கள் சீராக்கலின் முரண்கள் உள்ளடக்கப்பட்டு அதில் ஒன்றிணைந்த நிதியத்துடன் ஈடுசெய்ய வேண்டிய மீதி மற்றும் அந்நிய செலாவணி முரண்களின் தேறிய இலாபம் அகற்றப்பட்டு கடந்த கால ரீதியில் சீராக்கமாக சொத்துக்களில் ஏற்பட்ட தாக்கம் மற்றும் கடன் பெறுவனவுகளில் ஏற்பட்ட தாக்கமாக காண்பித்து பொது நியத்தின் இறுதி மீதி	பொது நிதியத்தின் மீதி திரண்ட நிதியத்தின் மீதியை உள்ளடக்கி இருந்ததுடன் தேறிய சொத்துக்கள் சீராக்கல் கணக்கின் மீதி என்ற இரண்டு மீதிகளினதும் கூட்டுத்தொகை ஆனமையால் மீளாய்வாண்டின் தேறிய சொத்துக்கள் சீராக்கல் கணக்கில் ஏற்பட்ட வேறுபாடுகளும் பொது நிதியத்தில் சீராக்கப்பட்டுள்ளது.	கணக்கீட்டு மூலதத்துவங்களின் அடிப்படையில் உரிமை மூலதனம் / தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று தயாரிக்கப்படல் வேண்டும்.

	கணிப்பிட்டு உரிமை மூலதனம் / தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக கடந்த கால ரீதியில் சீராகக்ங்கள் மேற்கொள்ள முடியாதிருந்த சீரக்கமும் உரிமை மூலதனம் / தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்றில் மறைமுகமாக சீராக்கப்பட்டதுடன் மீளாய்வாண்டின் போது நிதி மற்றும் நிதயல்லா சொத்துக்களில் மேற்கொள்ளப்பட்ட சீராக்கங்கள், வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு கடன் நிலுவைகளில் மேற்கொள்ளப்பட்ட சீராக்கங்கள் தவறுகளை சரிசெய்யும் சீராக்கம் பொது நிதியத்தில் மறைமுகமாக சீராக்கப்பட்டதன் காரணமாக உரிமை மூலதனம் / தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று தயாரிக்கப்பட்ட முறை கணக்கீட்டு மூல தத்துவங்களின் பிரகாரம் சரியாக இல்லாதிருந்தமையும் அதன் படி நிதிக் கூற்றுக்களை பயன்படுத்துபவர்களுக்கு அது தொடர்பான தெளிவாக புரிதலைப்பெற முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.		
(ஆ)	பௌதீக சொத்துக்களை கொள்வனவு செய்தல் அல்லது நிர்மாணம் மற்றும் ஏனைய முதலீடுகளைப் பெறுதல் ரூபா 476,457 மில்லியன் ஒவ்வொரு சொத்து வகுப்பின் பிரகாரம் முறையான வகைப்படுத்தலின்றி காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புகளின்படி தொடர்புடைய சொத்தின் பெறுமதி ரூபா 433,708 மில்லியன் அதிகரித்துள்ளது. அதன்படி, ரூபா 42,749 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டதுடன் இந்த வேறுபாடு உரிமை மூலதனம் / தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்றில் பொது நிதியத்தில் மறைமுகமாக சீராக்கப்பட்டிருந்தது.	செலவின விடய இலக்கம் 2101 முதல் 2108 வரை நிதியல்லாச் சொத்துக்கள் கைப்பற்றல் செலவின விடயத்தின் கீழ் கணக்கீடு செய்யப்படுகின்ற மொத்த பெறுமதி நிதியல்லாச் சொத்துக்களின் தனிப்பட்ட மீதிகளில் உள்ளடக்குதல் பொறுப்புக்களுக்கு உரிய அறிக்கையிடல் நிறுவனங்களின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக இருந்ததுடன் அவ்வாறு அறிக்கையிடப்பட்ட சொத்துக்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் குறிப்பு இலக்கம் 14 இல் காண்பிக்கப்பட்டுள்ளது. செலவின விடய இலக்கம் 2301 மூலதன பங்களிப்புக்கு உரியதாக	நிதியல்லா மூலங்கள் (elements) உரிய பிரகாரம் இனங்காண்பதற்கும், உறுதியப்படுத்தியதன் பின்னர் மாத்திரம் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

		ஏற்பட்ட வேறுபாட்டுக்கான காரணம் தெளிவுபடுத்தும் குறிப்புக்களில் ''அரசாங்கத்திற்கு உரிய மற்றும் ஏனைய கம்பனிகளுனிக் பங்கு உரிமைத் தன்மை'' இன் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளது.	
(இ)	மீளாய்வாண்டின் போது காசுப்பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் பொது முயற்சிகளுக்கான மூலதன பங்களிப்புகளுக்காக ரூபா 69,424 மில்லியன் செலவிடப்பட்டிருந்தாலும், மூலதன பங்களிப்புக் கணக்கின்படி ரூபா 87,285 மில்லியன் மூலதனமாக்கப்பட்டிருந்தது. எனினும், மூலதன பங்களிப்பு ரூபா 17,861 மில்லியன் பொறுப்பாகக் கணக்கிடப்படாதிருந்ததுடன் அந்த வேறுபாடும் உரிமை மூலதனம் / தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்றில் ஏற்படுகின்ற சொத்துக்களிலிருந்து ஏற்பட்ட தாக்கமாக கணக்கீட்டு மூல தத்துவங்களுக்கு முரணாக பொது நிதியத்தில் மறைமுகமாக சரிசெய்யப்பட்டது.	விளக்கமளித்தல் குறிப்பு இலக்கம் 05 இன் கீழ் செலவின விடய இலக்கம் 2301 மூலதன பங்களிப்புக்கு உரியதாக ஏற்பட்ட வேறுபாட்டுக்கான காரணம் ''அரசாங்கத்திற்கு உரிய மற்றும் ஏனைய கம்பனிகளில் பங்கு உரிமைத் தன்மை'' இன் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக கடந்த ஆண்டுகளின் பிழைகள் சரி செய்வதற்காக நாட்குறிப்புக்களும் பயன் படுத்தப்பட்டுள்ளது.	கணக்கீட்டு மூல தத்துவங்களுக்கு இணங்கும் வகையில் கணக்கு வைத்தல் வேண்டும்.
(ஈ)	பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் அரச வங்கிகள் இரண்டிலிருந்து பெறப்பட்ட பின்னர் பொதுத்திறைசேரிக்கு கையேற்கப்பட்ட ரூபா 788,682 மில்லியன் கடன் மீதி மீளாய்வாண்டின் போது ரூபா 547,127 மில்லியன் காலக் கடன் மற்றும் ரூபா 224,358 மில்லியன் ஆன திறைசேரி பிணைமுறியாக மாற்றப்பட்டன. எனினும் மாறற்ப்பட்டதன் காரணமாக எழுந்த ரூபா 17,197 மில்லியன் மீளாய்வாண்டின் நிதிச் செயலாற்றல் கூற்றில் சீராக்கப்படாமல் பொது நிதியத்தில் மறைமுகமாக சீராக்கப்பட்டமை அவதானிக்கப்பட்டது.	அந்த மீதிய உரிய கடன் தொகை இலங்கை வங்கியின் கால ரீதியான கடன், மக்கள் வங்கியின் கால ரீதியான கடன் மற்றும் திறைசேரி பிணை முறிகளாக மாற்றப்பட்டதன் பின்னர் எஞ்சியிருந்த மீதியாகும். தற்போது பயன்பாட்டில் காணப்படுகின்ற கணக்கீட்டு முறைமையின் பிரகாரம் கடன் தொகை மற்றும் கம்பனி கடன் முதலீட்டுக் கணக்கு ஊடாக தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	மேற்படி

(உ)	பாதீட்டு செயலாற்றல் அறிக்கையின் குறிப்பு இலக்கம் 13 இன் படி, அரசாங்க பிணைமுறியின் கீழ் வழங்கப்பட்ட பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கடன்களை காலக் கடன்களாக மாற்றுவதில், மீளாய்வாண்டின் போது இலங்கை வங்கியிடமிருந்து ரூபா 484,033 மில்லியன் மற்றும் மக்கள் வங்கியிடமிருந்து ரூபா 167,162 மில்லியன் ஆக மொத்தமாக ரூபா 651,195 மில்லியன் காலக் கடன்களாகப் பெறப்பட்டுள்ளமையும், இதில் இலங்கை வங்கியிடமிருந்து ரூபா 410,430 மில்லியன் மற்றும் மக்கள் வங்கியிடமிருந்து ரூபா 136,698 மில்லியன் காலக் கடன்களாக மாற்றுவதற்கு இருந்தமையும் காண்பிக்கப்பட்டிருந்தது. அதன்படி, இலங்கை வங்கியிடமிருந்து ரூபா 73,603 மில்லியன் மற்றும் மக்கள் வங்கியிடமிருந்து ரூபா 30,464 மில்லியன் ஆக ரூபா 104,067 மில்லியன் மொத்தமாக காசுப்பாய்ச்சல் கூற்றில் மொத்த உள்நாட்டு கடன் பெறுவனவாக காட்டப்பட்டிருந்த நிலையிலும், இந்தப் பெறுமதி உரிய கடன் மாற்றத்திற்குப் பின்னர் அதன் அடிப்படையில் நிலுவை வட்டியாக வெளிப்படுத்தப்பட்டிருந்தது.	ஒரு கடன் பெறுவனவு உபகரணம் இன்னுமொரு கடன் பெறுவனவு உபகரணமாக மாற்றும் போது பிரதான பேரேட்டுக் கணக்கு ஊடாக அறிக்கையிடப்படுகின்ற கொடுக்கல் வாங்கல்கள் காசுப் பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட்டதுடன் இதன் போது காசு உட்பாய்ச்சல் மற்றும் வெளிப்பாய்ச்சல் ஒன்றுக்கு ஒன்று சீராக்கப்பட்ட பின்னர் காசுப் பாய்ச்சல் கூற்றில் இறுதி மீதிக்கு தாக்கம் ஏற்படுவது இல்லை.	கணக்கீட்டு மூல தத்துவங்களுக்கு இணங்க காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படல் வேண்டும்.
(ஊ)	அரசாங்க பிணைமுறியின் கீழ் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மக்கள் வங்கியிடமிருந்து பெறப்பட்ட ரூபா 262,583 மில்லியன் கடன் மீள்கட்டமைப்பிற்குரிய திறைசேரி பிணைமுறிகள் விநியோகிக்கப்பட்டதாகக் கருதி பாதீட்டு செயலாற்றல் அறிக்கையின் குறிப்பு இலக்கம் 13 இன் இல் காண்பித்து அதில் ரூபா 224,358 மில்லியன் மீள்கட்டமைப்பாகக் கழிக்கப்பட்டிருந்தது. அதன்படி ரூபா 38,225 மில்லியன் உள்நாட்டு கடன் பெறுவனவுகளில் மறைமுகமாகச் சேர்க்கப்பட்டாலும், அப்பெறுமதி கடன் மீள்கட்டமைப்பில் மூலதனமாக்கப்பட்ட நிலுவை வட்டியாக இருந்தமை இருந்தமை அவனிக்கப்பட்டது.	அரசாங்கத்தின் பிணையின் அடிப்படையில் வழங்கப்பட்ட பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் கடன் மீள் கட்டமைப்பின் போது நிலுவை வட்டி பெறுமதியும் உள்ளடக்கப்பட்டு புதிய மீள் கட்டமைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.	கொடுக்கல் வாங்கல்களின் சரியான வடிவத்தை வெளிப்படுத்தும் வகையில் கணக்கு வைத்தல் வேண்டும்.

(எ)	இலங்கை வங்கியிடமிருந்து பெறப்பட்ட அ. டொலர் 240 மில்லியன் அதாவது ரூபா 77,742 மில்லியன் வெளிநாட்டு நாணய அலகு வங்கிக் கடன்கள் (செயற்திட்டம் அல்லாத) மீளாய்வாண்டில் கடன் மீள்கட்டமைப்பின் கீழ் நிலுவையில் உள்ள வட்டி உட்பட ரூபா 82,551 மில்லியன் திறைசேரி பிணைமுறியாக மாற்றப்பட்டன. அதன் போது காசு உட்பாய்ச்சல் அல்லது வெளிப்பாய்ச்சல் இடம்பெறாதிருந்த போதிலும் அவை கடன் பெறுவனவு மற்றும் கடன் திருப்பிச் செலுத்துதல்களாக காசுப்பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது.	ஒரு கடன் பெறுவனவு உபகரணம் இன்னுமொரு கடன் பெறுவனவு உபகரணமாக மாற்றும் போது பிரதான பேரேட்டுக் கணக்கு ஊடாக அறிக்கையிடப்படுகின்ற கொடுக்கல் வாங்கல்கள் காசுப் பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட்டதுடன் இதன் போது காசு உட்பாய்ச்சல் மற்றும் வெளிப்பாய்ச்சல் ஒன்றுக்கு ஒன்று சீராக்கப்பட்ட பின்னர் காசுப் பாய்ச்சல் கூற்றில் இறுதி மீதிக்கு தாக்கம் ஏற்படுவது இல்லை.	கணக்கீட்டு மூல தத்துவங்களுக்கு இணங்க காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படல் வேண்டும்.
(ஏ)	2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அரசாங்கத்தின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுகளின்படி மொத்த நிதி அல்லாத சொத்துக்கள் ரூபா 2,537,167 மில்லியன் ஆக இருந்த போதிலும், மீளாய்வாண்டில் அதற்கு நேரொத்த ஆரம்ப மீதி ரூபா 3,250,238 மில்லியன் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி, நிதி அல்லாத சொத்துக்களின் முன்னைய ஆண்டின் இறுதி மீதிக்கும், மீளாய்வாண்டின் ஆரம்ப மீதிக்கும் இடையே ரூபா 713,071 மில்லியன் வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.	நிதியல்லாச் சொத்துக்கள் உரிய பிரகாரம் கணக்கீடு செய்யும் பொறுப்புக்கள் ஒவ்வொரு அறிக்கையிடல் நிறுவனங்களின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு உரிய பொறுப்பாக இருந்ததுடன் அவ்வாறு ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களிலும் அறிக்கையிடப்படுகின்ற சொத்துக்களின் மீதிகளின் கூட்டுமொத்தம் அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுகின்றது.	நிதிக்கூற்றுக்களின் மூலங்கள் (elements) உரிய பிரகாரம் இனங்காண்பதற்கும், உறுதிப்படுத்திய தன் பின்னர் மாத்திரம் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஐ)	நிதிக்கூற்றுகளின் குறிப்பு இலக்கம் 14 இன் படி, சொத்து மாற்றல்களுக்குரிய மறைக் குறிப்பும் (Transfer Out) சொத்து அகற்றுதல் (Disposal) ஆக காண்பிக்கப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டில் அரசாங்கத்தால் உண்மையில் அகற்றப்பட்ட சொத்துக்களின் பெறுமதி நிதிக்கூற்றுகளில் வெளியிடப்படவில்லை.	எதிர்காலத்தில் கணக்கீட்டு முறைமையில் தேவையான மாற்றங்களை மேற்கொள்ளுவதை கவனத்தில் கொள்வதாக குறிப்பிடப்பட்டுள்ளது.	நிதிக்கூற்றுக்களில் தகவல்கள் சரியாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(ஒ)	நிதிக்கூற்றுகளின் குறிப்பு இலக்கம் 15 இன் படி, 2023 ஆம் ஆண்டிற்கான பின்னோக்கி சரிசெய்தல்களாக ரூபா 79,728 மில்லியன் உரிமை மூலதனம்/ தேறிய சொத்துக்களில் ஏற்பட்ட மாற்றங்கள் கூற்றிலும், மீளாய்வாண்டிற்குரிய ரூபா 26,003 மில்லியன் மூலதனச் செலவினமாகவும் மொத்தமாக ரூபா 105,731 மில்லியன் தொகை, அரசாங்க உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான முதலீட்டு சொத்துக்களாக மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுகளில் வெளியிடப்பட்டுள்ளன. இருப்பினும், இந்த முதலீடுகள் செய்யப்பட்ட நிறுவனங்களின் நிதிக்கூற்றுகளின் படி அரசாங்கத்திற்கு அத்தகைய உரிமை / ஆர்வம் இருப்பதாக (interest) உறுதிப்படுத்தப்படவில்லை. இதில், மாகாண சபைகளுக்கான அரசாங்க உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான முதலீட்டு சொத்துக்களாக மொத்தமாக ரூபா 14,942 மில்லியன் வெளிப்படுத்தப்பட்டது. இருப்பினும், அரசாங்க நிதிக்கூற்றுகளில் குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகளின் கீழ் மாகாண சபைகளின் நிதி மற்றும் செயல்பாட்டு நடவடிக்கைகள் மீது அரசாங்கத்திற்கு குறிப்பிடத்தக்க கட்டுப்பாடு இல்லாததால், மாகாண சபைகளின் வருமானம் மற்றும் செலவினம் இந்த நிதிக்கூற்றுகளின் ஒரு பகுதியாகக் கருதப்படவில்லை எனவும் காண்பிக்கப்பட்டிருந்தது.	இந்தப் பெறுமதி அரசாங்கத்தின் செலவினம் ஒவ்வொரு நிறுவனம் ஊடாக உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்வதற்காக பெறப்பட்ட முதலீடாக அன்றி உரிய நிறுவனங்களின் உரித்து கைப்பற்றும் வகையில் மேற்கொள்ளப்பட்ட முதலீடு இல்லை. அதனால் ஒவ்வொரு நிறுவனங்களினதும் நிதிக்கூற்றுக்களில் அரசாங்கத்திற்கு உள்ள உரித்தாக இந்த முதலீடு அனங்காணப்படவில்லை. எனினும் முதலீடு ஊடாக உருவாகின்ற சொத்துக்கள் உரிய நிறுவனங்களின் ஐந்தொகையில் வெளிப்படுத்தப்படுகின்றது.	நிதி கூற்றுக்களில் மூலங்களை இனங்காணும் போது அவற்றை ஒப்பீடு செய்து உரிய பிரகாரம் பரீட்சித்துப் பார்த்தல் வேண்டும்.
(ஓ)	2022 சனவரி 01 இல் உள்ளவாறு காணப்பட்ட ஒன்றிணைந்த நிதியத்தின் மறை பெறுமதியான ரூபா 990,491 மில்லியன் மற்றும் தேறிய சொத்து சரிசெய்தல் கணக்கின் மறை பெறுமதியான ரூபா 14,040,298 மில்லியன் சேர்க்கப்பட்டு ரூபா 15,030,789 மில்லியன் பொது நிதியத்தின் (General Fund) உரிமை மூலதனம் / தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்றில் குறிப்பிட்டு மீளாய்வாண்டின் போதும் முன்கொண்டுவரப்பட்டிருந்த போதிலும் பொது நிதியை ஸ்தாபித்தல்/ஏற்படுத்தும் அடிப்படை	பொது நிதியம் தொடர்பான அறிமுகப்படுத்தல் ஒன்று எதிர்காலத்தில் தெளிவுபடுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தில் உள்ளடக்குவதற்கு குறிப்பிடப்பட்டுள்ளது.	நிதிக்கூற்றுக்கள் வாசகர்களுக்கு சரியான தகவல்களை தெளிவாக விளங்கிக் கொள்ளக் கூடிய சரியான முறையில் பெற்றுக் கொள்ளக் கூடிய பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல்

	வெளியிடப்படுத்தப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அந்த மீதி ரூபா 20,951,036 மில்லியன் ஆகும். மேலும் அதன் படி 2024 திசம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட பொது நிதியத்தின் மீதியை அடிப்படையாகக் கொண்டு ஒன்றிணைந்த நிதியத்தின் மீதி காண்பிக்கப் பட்ட முறையில் நிதிக் கூற்றுக்கள் பரிசீலனை செய்யும் வசதிகள் இணக்கக்கூற்று தயாரித்து வசதிகளை வழங்கும் வகையில் இணைக்கக்கூற்றொன்று தயாரித்து சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை.		வேண்டும்.
(ஔ)	வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தால் சமர்ப்பித்த தகவலின்படி, மீளாய்வாண்டின் போது வெளிநாட்டுக் கடன் மீள்கட்டமைப்பின் கீழ் யூரோ 4.5 மில்லியன் ஆன கடன் உடன்படிக்கைக்குரிய யூரோ 2.4 மில்லியன் அதாவது ரூபா 738 மில்லியன் கடன் மீதியொன்று கடன் உரிமையாளரால் கைவிடப்பட்டதாகக் (Hair cut) குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், நிதிக்கூற்றின் குறிப்பு இலக்கம் 26 (ii) இன் படி, இந்தக் கடன் ஒப்பந்தம் தொடர்பாக யூரோ 1.9 மில்லியன் அதாவது ரூபா 627,588 மில்லியன் மாற்றியமைக்கப்பட்டதாகக் (Reverse) காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த அடிக்குறிப்பின் (Foot Note) பிரகாரம் கடன் உடன்படிக்கையின் கீழ் மீள்கட்டமைக்கப்பட்ட தொகையில் ரூபா 821 மில்லியன் கடன் பதிவழிக்கப்பட்டதாகக் (Hair cut) காண்பிக்கப்பட்டிருந்ததுடன் உரிமை மூலதனம் / தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்றில் பொது நிதியத்தில் மறைமுகமாக செலவு வைக்கப்பட்டிருந்தது.	எதிர்காலத்தில் கணக்கீட்டு முறைமையினை அபிவிருத்தி செய்வதன் மூலம் பேரேட்டுக் கணக்குகளை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	கொடுக்கல் வாங்கல்கள் கணக்கீட்டு மூல தத்துவங்களுக்கு இணங்க கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.
(க)	பாதீட்டு செயலாற்றல் கூற்றின் குறிப்பு இலக்கம் 11 இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி, வெளிநாட்டுக் கடன் மீள்கட்டமைப்பின் காரணமாக உருவான செயற்திட்டக் கடன்களுடன் தொடர்புடைய ரூபா 89,097 மில்லியன் நிலுவையில் உள்ள கடன்	ஒரு கடன் பெறுவனவு உபகரணம் இன்னுமொரு கடன் பெறுவனவு உபகரணமாக மாற்றும் போது பிரதான பேரேட்டுக் கணக்கு ஊடாக	கணக்கீட்டு மூல தத்துவங்களுக்கு இணங்க காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படல் வேண்டும்.

	வட்டி பெறுமதி மீளாய்வாண்டில் பெறப்பட்ட வெளிநாட்டுக் கடன் பணமாக காசுப்பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது.	அறிக்கையிடப்படுகின்ற கொடுக்கல் வாங்கல்கள் காசுப்பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட்டதுடன் இதன் போது காசு உட்பாய்ச்சல் மற்றும் வெளிப்பாய்ச்சல் ஒன்றுக்கு ஒன்று சீராக்கப்பட்ட பின்னர் காசுப் பாய்ச்சல் கூற்றில் இறுதி மீதிக்கு தாக்கம் ஏற்படுவது இல்லை.	
(கா)	நிதிக்கூற்றின் குறிப்பு இலக்கம் 26 (iv) இன் பிரகாரம் சர்வதேச இறையாண்மை பிணைமுறிகளுக்காக அ.டொலர் 12,281 மில்லியன் அதாவது ரூபா 3,362,306 மில்லியன் செலுத்தப்பட்டதாகக் கூறப்பட்டிருந்தாலும், வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தில் இருந்து பெறப்பட்ட தகவல்களின்படி, அத்தகைய கட்டணம் எதுவும் செலுத்தப்படவில்லை. இதன் போது எந்தவொரு காசு வெளிப்பாய்ச்சலும் ஏற்படவில்லை என்பது அவனிக்கப்பட்ட போதிலும், காசுப்பாய்ச்சல் கூற்றில் இந்த பெறுமதி வெளிநாட்டுக் கடன் கொடுப்பனவாகக் காட்டப்பட்டுள்ளது. மேலும்,இந்தக் கொடுப்பனவு தொடர்பாக ரூபா 624,319 மில்லியன் பரிமாற்ற இலாபம் கணக்கிடப்பட்டு அரசாங்க நிதிக்கூற்றுகளில் சீராக்கப்பட்டதுடன் அந்தக் கணக்கீட்டின் அடிப்படை மற்றும் கணக்கீடுகள் தொடர்பான ஏனைய தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.	ஒரு கடன் பெறுவனவு உபகரணம் இன்னுமொரு கடன் பெறுவனவு உபகரணமாக மாற்றும் போது பிரதான பேரேட்டுக் கணக்கு ஊடாக அறிக்கையிடப்படுகின்ற கொடுக்கல் வாங்கல்கள் காசுப் பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட்டதுடன் இதன் போது காசு உட்பாய்ச்சல் மற்றும் வெளிப்பாய்ச்சல் ஒன்றுக்கு ஒன்று சீராக்கப்பட்ட பின்னர் காசுப் பாய்ச்சல் கூற்றில் இறுதி மீதிக்கு தாக்கம் ஏற்படுவது இல்லை.	காசு அடிப்படையில் காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படல் வேண்டும்.
(கி)	மீளாய்வாண்டில் சர்வதேச இறையாண்மை பிணைமுறிக் கடன் மீள்கட்டமைக்கப்படும் போது எந்தவொரு காசு உட்பாய்ச்சலும் இல்லாதிருந்த ரூபா 3,206,577 மில்லியன் ஆன மீள்கட்டமைக்கப்பட் பெறுமதி, கடன் பெறுவனவாக கருதி காசுப்பாய்ச்சல் கூற்றில் நிதி நடவடிக்கைகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.	மேற்படி	மேற்படி

(கீ)	மீளாய்வாண்டுக்கு முன்னர் நிதி நிலைமைக்கூற்றில் பெயரளவு கணக்காக இருந்த வெளிநாட்டு கடன் சுழற்சி நிதியம் (Foreign Loan Revolving Fund), வெளிநாட்டு கடன் சீராக்கல் கணக்குகளாக(Foreign Loan Adjustment Accounts) மாற்றப்பட்டது. எனினும், நிதிக்கூற்றுக்களின் உள்ளடக்கத்தில் (Table of Contents) மற்றும் குறிப்பு இலக்கம் 09 இன் கீழ் மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றில் அது அதே பெயரில் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் புதிய கணக்கின் பெயரான வெளிநாட்டு நாணயத்தில் குறிப்பிடப்பட்ட நிதிரீதியான சொத்துக்களை (Monitory Assets) (அந்நிய செலாவணித் தொகையில் உள்ள முதலீடுகள் தவிர) உள்ளூர் நாணயமாக மாற்றுவதன் மூலம் ஏற்பட்ட ரூபா 54,163 மில்லியன் அந்நிய செலாவணி பரிமாற்ற இழப்பு கணக்கீட்டு மூலதத்துவங்களின்படி மீளாய்வாண்டின் போது கணக்கீட்டு தேவையின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட நிதி செயலாற்றல் கூற்றில் சீராக்கப்படாமல் வெளிநாட்டு கடன் சரிசெய்தல் கணக்கில் பதிவு செய்யப்பட்டு நிதி நிலைமைக் கூற்றில்ல் எந்த மாற்றங்களும் செய்யாமல் நிதி நிலைமைக் கூற்றில் நிதியக் கணக்காக காண்பிக்கப்பட்டிருந்தது.	சரி செய்வதற்கு குறிப்பிடப்பட்டுள்ளது.	நிதிக்கூற்றுக்களின் உள்ளடக்கம் சரியாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
(கு)	மீளாய்வாண்டில் நிதி அல்லாத சொத்துக்களை விற்பனை செய்வதிலிருந்து பெறப்பட்ட ரூபா 1,110 மில்லியன் அதற்கு நேரொத்த கிரயத்துடன் சீராக்கி தேறிய தாக்கம் கணிப்பிடப்பட்டாமல் பெறவேண்டிய மொத்த பெறுமதி நிதிச் செயலாற்றல் கூற்றில் வருமானமாகக் காண்பிக்கப்பட்டது.	நிதியல்லாச் சொத்துக்கள் விற்பனை மற்றும் விற்பனைப் பெறுமதி கணக்கீடு செய்தல் தொடர்பாக தற்போது பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கையின் பிரகாரம் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.	கணக்கீட்டு மூல தத்துவங்களுக்கு இணங்க கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.
(கூ)	வெளிநாட்டு நாணயங்களில் குறிப்பிடப்பட்ட நிதிப் பொருட்களை உள்ளூர் நாணயமாக மாற்றுவதன் மூலம் ஏற்படும் அந்நிய செலாவணி இலாபம் அல்லது இழப்புகளுக்கான கணக்கீட்டின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட நிதிச் செயலாற்றல் கூற்றில் சீராக்கப்படவேண்டியிருந்த போதிலும்	சரி செய்வதற்கு குறிப்பிடப்பட்டுள்ளது.	கணக்கீட்டு மூல தத்துவங்களின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும்.

	குறிப்பு இலக்கம் 27 இல் பல்வேறு கணக்குகளின் கீழ் அந்நிய செலாவணி சீராக்கம் கணக்கில் காட்டப்பட்டுள்ள ரூபா 125 மில்லியன் தொகைக்கு நிதிச் செயலாற்றல் கூற்றில் சீராக்கப்படவில்லை.		
(கெ)	மீளாய்வாண்டில் குத்தகைக்கு விடப்பட்ட வாகனங்களுக்கான மூலதன தவணை கட்டணம் செலுத்துதல் ரூபா 464 மில்லியன் காசுப்பாய்ச்சல் கூற்றில் நிதி நடவடிக்கைகளின் கீழ் உள்ளடக்கப்படாமல் முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து பெறப்பட்ட காசு உட்பாய்ச்சலாக காண்பிக்கப்பட்டிருந்தது.	குத்தகை முறையின் கீழ் சொத்துக்கள் கைப்பற்றும் போது உரிய பெறுமதி ஒரே தடவையில் செலுத்தப்படாது இருந்ததுடன் குத்தகை தவணைப் பணத்திற்கு உரிய மூலதன செலுத்துதலின் அளவு மாத்திரம் செலவின விடய இலக்கம் 2108 இன் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் உரிய பெறுமதி முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளது.	கணக்கீட்டு மூல தத்துவங்களின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படல் வேண்டும்.
(கே)	மீளாய்வாண்டில் பெறப்பட்ட ரூபா 41,899 மில்லியன் பொருட்கள் மற்றும் உபகரணங்களின் மானியம், அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்களில் சேர்க்கப்பட்டுள்ள காசுப்பாய்ச்சல் கூற்றில் நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட காசுப்பாய்ச்சலாக தவறாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.	பொருட்கள் மற்றும் உபகரணங்கள் மானியப் பெறுமதி காசுப்பாய்ச்சல் கூற்றில் காசு பாய்ச்சலாக குறிப்பிட வேண்டியிருந்த போதிலும் அதற்குரிய செலவினமும் காசுப் பாய்ச்சல் கூற்றில் நிதிய வெளிப்பாய்ச்சல் ஆக உள்ளடக்கப்பட்டமையால் இதன் மூலம் காசுப் பாய்ச்சல் கூற்றின் மீதிக்கு தாக்கம் ஏற்படவில்லை.	மேற்படி
(கை)	அரசாங்கத்தின் திணைக்களங்களுடன் செயல்படும் கணக்குகளின் கீழ் ரூபா 4,730 மில்லியன் செயல்படாத கணக்கு மீதிகளாக (Non-Operating Accounts) குறிப்பிடப்பட்டிருந்தாலும், அதன் காலப் பகுப்பாய்வு மற்றும் அதை செயல்படாததாகக் கருதுவதற்கான காரணங்கள் கணக்காய்விற்கு வெளியிடப்படவில்லை.	இந்த மீதி தொடர்பாக திணைக்களத்திற்கு சொந்தமாகக் காணப்படுகின்ற பழைய தகவல்கள் பகுப்பாய்வு செய்து செயலிழந்து காணப்பட்டமைக்கான காரணங்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	இந்த மீதியை தீர்த்து வைப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(கொ)	நிதிக்கூற்றுக்களில் காணி, பூர்திசெய்யப்படாத வேலைகளைத் தவிர்த்து நிதி அல்லாத சொத்துக்கள் மொத்தமாக ரூபா 993,765 மில்லியன் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு மூல தத்துவங்களுக்கு இணங்க தேய்மான சொத்துக்கள் மற்றும் அவற்றின் பயனுள்ள ஆயுட்காலங்களை அடையாளம் காண்பது, அந்த சொத்துக்களின் தேய்மான பெறுமதி மற்றும் அவற்றின் பயனுள்ள ஆயுட்காலங்களில் முறையான அடிப்படையில் விநியோகம் உள்ளிட்ட தேய்மான சொத்துக்கள் தொடர்பாக எந்த சரிசெய்தலும் புத்தகங்களில் செய்யப்படவில்லை. இதன் விளைவாக, மீளாய்வாண்டில் தொடர்புடைய செலவுகள் வெளிப்படுத்தப்படாதிருந்ததுடன் அதன்படி, நிதி நிலைமைக் கூற்றின் மூலம் அந்த சொத்துக்களின் நியாயமான பெறுமதி வெளிப்படுத்தப்படாதிருந்தமையும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.	அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது தற்போது காணப்படுகின்ற கணக்கீட்டுக் கொள்கையின் பிரகாரம் சொத்துக்களுக்கு உரிய பெறுமானத்தேய்வு கணக்கீடு செய்யப்படுவது இல்லை.	கணக்கீட்டு மூல தத்துவங்களுக்கு இணங்க கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.
(கோ)	நிதி நிலைமைக் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ள சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள், நடைமுறை மற்றும் நடைமுறை அல்லாதவை என வகைப்படுத்தப்படவில்லை. இதன் விளைவாக, நிதி அறிக்கைகளைப் பயன்படுத்துபவர்களும் ஆர்வமுள்ள தரப்பினரும் எதிர்வரும் ஆண்டில் அரசாங்கம் தீர்க்க வேண்டிய வெளிப்புற பொறுப்புக்களின் அளவு குறித்த தெளிவான புரிதலைப் பெற முடியவில்லை.	எதிர்காலத்தில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் நடைமுறை மற்றும் நடைமுறையல்லாத வகையில் வகைப்படுத்தும் இயலுமை தொடர்பாக ஆய்வு செய்யப்படுகின்றது.	நிதிக்கூற்றுக்கள் வாசகர்களுக்கு உரிய தகவல்களை வெளிப்படுத்தும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும்.
(கௌ)	மீளாய்வாண்டின் இறுதியில், நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம் மொத்த சொத்துக்கள் ரூபா 8,359,211 மில்லியன் ஆகவும், மொத்த வெளிப்புறப் பொறுப்புக்கள் ரூபா 29,251,796 மில்லியன் ஆக இருந்தது. அதன்படி, அரசாங்கத்தின் நிதிக்கூற்றுகளின் தேறியர சொத்து பெறுமதி மறை ரூபா 20,892,585 மில்லியன் ஆக இருந்தது.	மொத்த வெளிப் பொறுப்புக்களின் பெறுமதி உரிய சொத்துக்கள் உருவாக்கம் மேற்கொள்ளப்படாது இருந்ததுடன் உரிய வேறுபாடுகள் நியதிச் சட்டம் மற்றும் ஏனைய நிதியங்கள் மூலம் பிரதி நிதித்துவப்படுத்தப்படுகின்றது.	இனங்காணப்படாத அரசாங்கத்தின் சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ச)	நிதி அறிக்கையிடல் தேவைகளுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட மீளாய்வாண்டின் நிதிச் செயலாற்றல் கூற்றில் நிதிப் பற்றாக்குறை நிதியளிக்கப்பட்ட விதத்தை பிரதிபலிக்கவில்லை என்றாலும், நிதிச் செயலாற்றல் கூற்றில் அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்களில் வாசகர்களுக்கான குறிப்பின் கீழ் (Note to Readers) மீளாய்வாண்டின் நிதிப் பற்றாக்குறை, நிதியளிக்கப்பட்ட முறை நிதிச் செயலாற்றல் கூற்றில் வெளிப்படுத்தப்படும் என கூறப்பட்டுள்ளது.	சரி செய்வதற்கு குறிப்பிடப்பட்டுள்ளது.	வாசகர்களுக்கு சரியான தகவல்களை வெளிப்படுத்தும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும்.
(சா)	அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்களில் குறிப்பு இலக்கம் 26 இல் வெளிநாட்டு நாணயத்தில் பெறப்பட்ட உள்நாட்டுக் கடன்கள் மற்றும் வெளிநாட்டுக் கடன்களில் சேர்க்கப்பட்டுள்ள கால கடன்களில் வெளிநாட்டு நாணய பெறுமதி வெளியிடப்படவில்லை.	வெளிநாட்டு நிதியத்தில் இருந்து உள்நாட்டு கடன் பெற்றுக் கொள்வதற்காக தேவையான பிரகாரம் எதிர் வரும் ஆண்டுகளில் வெளிப்படுத்தல்களை மேற்கொள்வதற்கு குறிப்பிட்டுக் கொள்கின்றோம்.	வாசகர்களுக்கு முக்கியத்துவமான தகவல்கள் வெளிப்படுத்தப்படல் வேண்டும்.
(சி)	மீளாய்வாண்டின் இறுதியில் வரவு நிலுவைகளைக் கொண்டிருந்த நானாவித கணக்குகள் (Sundry Accounts) மற்றும் அரசாங்கத் திணைக்களங்களில் செயற்படுத்தப்படுகின்ற கணக்குகள் (Accounts generating with Government Departments) நிதி நிலைமைக் கூற்றில் பொறுப்புகளின் கீழ் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.	கணக்காய்வு அவதானிப்புக்களின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு குறிப்பிடப்பட்டுள்ளது.	சொத்துக்களின் மீதி மற்றும் பொறுப்புக்கள் மீதி ஈடு செய்து காண்பிக்காது இருந்தல் வேண்டும்.
(சீ)	கணக்கு வைக்கப்படாத வெளிநாட்டுக் கடன் அரசாங்க நிதிக்கூற்றுக்களில் விளக்கக் குறிப்புகள் 02 இன் கீழ் (Explanatory Notes) 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்கிடப்படாத வெளிநாட்டுக் கடனின் பெறுமதி ரூபா 1,070 மில்லியன் எனக் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தால் மீளாய்வாண்டின் போ		

துசமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் அவற்றின் எதிர்பார்க்கப்பட்ட (disbursements) காலப்பகுதியில் பின்வரும் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

கடன் இலக்கம்	**நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் எதிர்பார்க்கப்பட்ட காலப்பகுதி**	**திறைசேரி செயல்பாடுகள் திணைக்களத்தின் தகவல்களின் படி எதிர்பார்க்கப்பட்ட காலம்**
2012017	2020 டிசம்பர்	2024
2012025	2023 நவம்பர்	2024
2016035	2022 செப்டெம்பர்	2022 செப்டெம்பர் 2023 மார்ச் மற்றும் செப்டெம்பர்

(i)	திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தால் 2020 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மேலே காண்பிக்கப்பட்ட கடன் தேறியிருந்தமை காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் ஒரு கடன் கொடுக்கல் வாங்கல்களுக்குரிய ஒன்றுக்கொன்று பரஸ்பர வேறுபாடான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன் அந்த பொறுப்புக்கள் கையளித்த திணைக்களத்தால் வெளிநாட்டு கடன் தேறுதல் தொடர்பான முறையான மற்றும் நாளதுவரையான தகவல்கள் பேணிச்செல்லப்படாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. மேலும் வெளிநாட்டு கடன் தேறுதல் மற்றும் வெளிநாட்டுக் கடன் பெற்றுக்கொள்ளல் அறிக்கையிடப்படுகின்ற முறைமை Stock	ஒவ்வொரு கடன் எதிர்பார்க்கப்பட்ட மதிப்பீடு திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தால் கணக்கீடு செய்தல் உரிய செயற்திட்டம் மற்றும் அமைச்சினால் அந்த எதிர்பார்க்கப்பட்ட மதிப்பீடு சரியாக இருந்தமை உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் மாத்திரம் ஆகும். எனினும் இந்த எதிர்பார்க்கப்பட்ட மதிப்பீடுகளுக்கு உரிய செலவினங்கள் சரி செய்யப்பட்டதாக செயற்திட்ட அலுவலகம் மற்றும் உரிய அமைச்சினால் உறுதிப்படுத்தாமையின் காரணமாக அதற்கு நேரொத்த கடன் தொகை	அரச கடன் பெறுவனவுகளை கணக்கீடு செய்தல் முறையான பிரகாரம் மேற்கொள்ளல் வேண்டும்.

	and Flow Report No.1 அறிக்கையின் பிரகாரமும் மேற்கூறப்பட்ட கடன் தொடர்பாக முறையான மற்றும் நாளதுவரையான தகவல்கள் பேணிச்செல்லப் பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் மேற்கூறப்பட்ட வெளிநாட்டுக் கடன் கொடுக்கல் வாங்கல்களுக்கே மேலதிகமாக முறையான அறிக்கை இல்லாத ஏனைய வெளிநாட்டுக் கடன் காணப்பட்டமை மேற்கூறப்பட்ட ஆபத்துக்களுடன் காணப்படுகின்றமை மேலும் அவதானிக்கப்பட்டது.	கணக்கீடு செய்வதற்கு முடியாது இருந்தது. எனினும் உரிய கடன் தொகையை கணக்கீடு செய்வதற்காக தேவையான மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.	
(ii)	மீளாய்வாண்டினைப் போன்று இதற்கு முன்னைய ஆண்டின் போதும் தேறியிருந்த போதும் கணக்கீடு செய்யப்படாத கடன் பெறுமதி காணப்பட்டதன் காரணமாக 2024 திசம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமைக் கூற்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வெளிநாட்டுக் கடன் பெறுமதி பிழையாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.	திறைசேரியினால் கடன் எதிர்பார்த்தல்கள் அறிக்கையிடப்பட்ட உடன் உரிய அமைச்சு அல்லது திணைக்களம் மற்றும் செயற்திட்டத்திற்கு அந்த எதிர்பார்க்கப்பட்ட மதிப்பீடு அறிவிக்கப்படுவதுடன் இது தொடர்பாக அவ்வப்போது உரிய அமைச்சுக்கு மீள் நினைவூட்டல் கடிதமும் அனுப்பப்பட்டுள்ளது. எனினும் உரிய அமைச்சு அல்லது திணைக்களத்தின் மூலம் செலவினம் உறுதிப்படுத்தாமையின் காரணமாக அதற்கு நேரொத்த கடன் பொறுப்புக்களும் கணக்கீடு செய்வதற்கு முடியாது இருந்தது.	கடன் கணக்கீடு செய்தல் காலப்பகுதி எண்ணக்கருவிற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(iii)	நிதிக் கூற்றுக்களில் முக்கிய கணக்கீட்டுக் கொள்கையின் கீழ் செலவினங்களை இனங்காண் பதற்குரிய கணக்கீட்டுக் கொள்கையின் பிரகாரம் சகல செலவினங்கள், கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்ட காலப்பகுதியில் கணக்கீடு செய்ய வேண்டுமென காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் கணக்கீடு செய்யப்படாத வெளிநாட்டு கடன் பணத்திற்காக உரிய வட்டியை உள்ளடக்கி அந்தக் கடனின் மூலம் மேற்கொள்ளப்பட்ட ஏனைய	திறைசேரியினால் கடன் எதிர்பார்க்கப்பட்ட மதிப்பீடு அறிக்கையிடப்பட்ட உடன் உரிய அமைச்சு மற்றும் திணைக்களுங்களுக்கு உரிய செலவினங்கள் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்படுகின்றது . எனினும் உரிய நிறுவனத்தால் தாமதமாக செலவினம்	மீளாய்வாண்டிற்குரிய சகல செலவினங்களும் கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.

	செலவினங்கள் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படமல் காணப்படுகின்றமை மேலும் அவதானிக்கப்பட்டது.	உறுதிப்படுத்தாமையின் காரணமாக உரிய பணம் கணக்கீடு செய்வதற்கு முடியாது உள்ளது. எனினும் திறைசேரியினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் காரணமாக உரிய கணக்கீடு செய்யாதிருந்த நிலமை தற்போது கவனத்தில் கொள்ளக் கூடிய மட்டத்தில் குறைத்துக் கொள்வதற்கு முடியுமாக உள்ளது.	
(சு)	திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் தகவல்களின் பிரகாரம் 2023 ஆம் ஆண்டில் அல்லது அதற்கு முன்னைய ஆண்டுகளில் தேறியிருந்து நிதி நிலைமைக் கூற்றிற்கு வெளியே பேணிச்செல்லப்படுகின்ற 03 கடன் வகைகளுக்குரிய கூட்டுமொத்தமான ரூபா 15,211 மில்லியன் மீளாய்வாண்டின் போது கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களில் எந்தவொரு வெளிப்படுத்தலும் மேற்கொள்ளப்படவில்லை. அதன் பிரகாரம் ஏதாவது ஆண்டொன்றில் தேறியிருந்த போதும் உரிய ஆண்டின் போது கணக்கீடு செய்யப்படாமல் நானாவித வெளிநாட்டுக் கடன் கொடுக்கல்வாங்கல்கள் பேணிச் செல்லப்பட்டிருந்தமையும் அந்த கொடுக்கல்வாங்கல்களுக்குரிய வட்டியினை உள்ளடக்கிய நானாவித செலவினங்கள் உரிய காலப் பகுதியின் போதும் கணக்கீடு செய்ய முடியாதிருந்தமையும் கணக்காய்வின் போது மேலும் அவதானிக்கப்பட்டது.	அவ்வாறு எதிர்பார்க்கப்படாத மதிப்பீட்டு வெளிநாட்டு கடன் தொடர்பாக உரிய அமைச்சு மற்றும் திணைக்களத்திற்கு தொடர்ச்சியாக ஆலோசனை வழங்கி அதனை அவைகளைக் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை வழங்குவதற்கு குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அந்தந்த அமைச்சுக்களில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அலுவலகங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு கணக்கீடு செய்யப்படாத கடன் தொகை களின் பெறுமதி போதியளவில் குறைத்துக் கொள்வதற்கு தற்போது முடியுமாக உள்ளதுடன் தொடர்ந்தும் உரிய நடவடிக்கை களும் எடுப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.	கடன்களை கணக்கீடு செய்தல் கால எண்ணக்கருவிற்கு இணங்க மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(சூ) வெளிநாட்டுக் கடன் அறிக்கையிடப்படுகின்ற முறைமையில் Stock and Flow Report No.1 அறிக்கையின் பிரகாரம் 18 கடன் உடன்படிக்கைகளுக்குரிய 2023 திசம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட மீதிக்கும், மீளாய்வாண்டின் ஆரம்ப மீதிக்கும் இடையே தேறிய கூட்டுப்பெறுமதி ரூபா 3,711 மில்லியன் ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

கடன் மீள் கட்டமைக்கும் செயற்பாடுகளின் கீழ் உள்ள முரண்களைக் கவனத்திற்கொள்ளும் போது வெளிப் படுத்தப்பட்ட முன்னைய ஆண்டுகளில் ஏற்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மீளாய்வாண்டின் போது வெளிநாட்டு வழங்கள் திணைக்களத்திற்கு அனுப்புதல், தவறுதலாக நாணயமாற்று அதிக பெறுமதி குறிப்பிடப்பட்ட தவறை சரிசெய்தல் மற்றும் தாமதமடைந்து கிடைத்த எதிர்பார்க்கப்பட்ட மதிப்பீட்டு பெறுமதியைக் குறிப்பிடல் போன்ற விடயங்கள் காரணமாக இருந்தது.

அரச கடன் பெறல், கடன் சேவையிடல் கணக்கீடு செய்தல் முறையான பிரகாரம் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(செ) மீளாண்டின் நிதிக்கூற்றுக்களில் வெளிநாட்டுக் கடன் தேறுதல் மற்றும் வெளிநாட்டுக் கடன் பெறுவனவு மற்றும் செலுத்தும் அறிக்கையிடப்படுகின்ற முறைமையில் Stock and Flow Report No.1 அறிக்கையின் பிரகாரம் தேறியவைகளுக்கிடையே பின்வரும் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டது.

கடன் இல.	ஆரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம்	துகவல் முறைமையின் பிரகாரம் எதிர்பாாக்கப்பட்டவை	வேறுபாடு
2012024	USD 947,057	USD 709,147	USD 237,910
2019019	USD 28,717,515	USD 24,938,700	USD 3,778,815
2019043	SAR 47,320,932	SAR 47,284,890	SAR 36,042
2015021	EUR 28,227	இல்லை	EUR 28,227
2012025	SAR 570,876	SAR 272,171	SAR 298,705

வேறுபாட்டிற்குரிய காரணம் மீளாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட இடம்பெற்ற தேறியவைகள் என்ன என்பது

2023 ஆம் ஆண்டின் போது எதிர்பார்க்கப்பட்ட மதிப்பீட்டில் 2024 ஆம் ஆண்டின் போது திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்கு அறிக்கையிடப்பட்டதுடன் அது 2024 ஆம் ஆண்டில் கணக்கீடு செய்தல் இந்த வேறுபாட்டிற்கு காரணமாக இருந்தது.

மேற்படி

	கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்படவில்லை. எனினும் இந்தக் கடன் உடன்படிக்கைகளுக்குரிய முன்னைய ஆண்டுகளில் தேறி கணக்கீடு செய்யப்படாதிருந்த போதும் 2024 ஆம் ஆண்டில் கணக்கீடு செய்யப் பட்ட தேறியவைகளும் இல்லாதிருந்தமை திறைசேரி திணைக்களத்தால் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இந்த தேறியவைகள் எந்தகக் காலப்பகுதிக்கு உரியது என கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப் படாதிருந்ததுடன் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்கு அறிவிக்காமல் தேறி இருந்தமை கணக்கீடு செய்யப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.		
(சே)	மீளாய்வாண்டின் போது அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்களின் குறிப்பு இலக்கம் 26 இல் சமர்ப்பிக்கப்பட்ட வெளிநாட்டுக் கடன் மீதிக்காக ரூபா 3,022 மில்லியன் சீராக்கம் மேற்கொள்ளப்பட்டதுடன் இந்த சீராக்கலின் காரணமாக வெளிநாட்டு கடன் மீதி தேறிய ரீதியில் அதிகரித்து சென்றிருந்தது. இந்த சீராக்கங்களை மேற்கொள்வதற்கான காரண விடயங்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படாதிருந்த துடன் கணக்காய்விற்கும் சமர்ப்பிக்கப்படவில்லை.	கடன் அறிக்கையில் CSDRMS முறைமையில் குறிப்பிடப் பட்ட கடன் மீதி மற்றும் நிதிக்கூற்றுக்களின் கடன் மீதி இணக்கம் செய்யும் போது இனங்காணப்படாத வேறு பாடுகளை சரிசெய்வதற்காக இந்த சீராக்கம் மேற் கொள்ளப்பட்டுள்ளது.	நிதிக்கூற்றுக்கள் வசகர்களுக்கு முக்கியமான விடயங்களை வெளிப்படுத்துல் வேண்டும்.
(சை)	மீளாய்வாண்டின் போது வெளிநாட்டுக் கடன் பெறுவனவுகள் 20 இற்குரிய ரூபா 3,969 மில்லியன் உகுரிய கடன் உரிமையாளருக்கு மீளச்செலுத்தப்பட்டிருந்த போதிலும் (Refund) அதற்கான காரணம் நிதிக்கூற்றுக்களில் முறையான பிரகாரம் வெளிப்படுத்தடாதிருந்ததென கணக்காய்விற்கும் சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும் தேறிய கடனுக்குரிய கடன் கொடுத்தோருக்கு மீள வழங்கும் போது அந்தக் கடன் தேறிய சந்தர்ப்பத்தில் இருந்து மீண்டும் கடன் உரிமையாளருக்கு வழங்கும் வரை நிறுத்திவைக்கப்பட்ட காலப் பகுதிக்காக கடன் வட்டி செலுத்த வேண்டியிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது.	கடன் பங்களிப்பாளர்களுக்கு மீண்டும் அனுப்புதல் (Refund) கடன் உடன்படிக்கையின் பிரகாரம் பல்வேறு தரப்பட்ட கடன் வழங்குகின்ற நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட கடன் தொகைகளில் இருந்து எந்தவொரு அளவும் சேமிக்கப்படுவதாயின் செயற்திட்ட இறுதியின் போது அவ்வாறு சேமிக்கப்படுகின்ற நிதி மீளச் செலுத்துவதற்கும், பொருத்தமற்ற செலவினங்களை மீண்டும் கடன்	நிதிக்கூற்றுக்கள் வாசகர்களுக்கு முக்கியமான விடயங்களை வெளிப்படுத்துதல் வேண்டும்.

		பங்களிப்பாளர்களுக்கு செலுத்துவதற்கும் அல்லது Mobilization advance மீள அறவிடுதல் போன்ற பல்வேறு காரணங்களினால் ஏற்படக்கூடிய சகல மீள அனுப்புதல்களும் (Refund) திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் ஊடாக கடன் பங்களிப்பாளருக்கு அனுப்பப்படாதிருந்த மையால் அவ்வாறு மீள செலுத்துவதற்குரிய சகல குறித்த காரணங்களும் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திடம் காணப்படவில்லை.	
(சொ)	நிதி நிலைமைக் கூற்றில் முழுமையாக வெளியே பேணிச்செல்லப்படு கின்ற 08 கடன் வகைகளுக்குரிய கூட்டுமொத்தமாக ரூபா 518,293 மில்லியன் கடன் மீதி 2022 ஆம் ஆண்டின் போது கணக்கீடு செய்யும் போது அந்த நிதியம் பயன்படுத்திய முறை மற்றும் அந்த பயன்படுத்தி கைப்பெற்றப்பட்ட எந்தவொரு சொத்தும் இதுவரை இனங்கண்டு அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டுவரப்பட்டிருக்க வில்லை. இந்த நிதி நிலைமைக் கூற்றில் பொது நிதியத்தின் மறை மீதி உயர்வடைந்து செல்வதற்கு காரணமாக இருந்தது.	அமைச்சரவைச் தீர்மானத்தின் பிரகாரம் இந்தக் கடன் மீதி 2022 ஆம் ஆண்டின் போது நிதிக்கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இந்தக் கடன் பெற்று கைப்பெற்றப் பட்ட சொத்துக்கள் உரிய பொது முயற்சிகளின் நிதிக் கூற்றுக்ளில் உள்ளடக்கப்பட்டுள்ளது.	கடன் பெற்று கைப்பற்றப்படுகின்ற சொத்துக்கள் அல்லது முதலீடுகள் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.
(சோ)	நிதிக் கூற்றுக்களில் குறிப்பு இலக்கம் 26(ii) இன் பிரகாரம் 2024001 என்ற கடன் ஆசிய அபிவிருத்தி வங்கியில் இருந்து பெறப்பட்ட கடனாக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களில் பாதீட்டு செயலாற்றல் அறிக்கையின் குறிப்பு இலக்கம் 11 இன் பிரகாரம் மற்றும் Stock and Flow Report No.1 இன் பிரகாரம் இது சர்வதேச அபிவிருத்தி சங்கத்தில் (International Development Association) இருந்து பெறப்பட்ட கடனாக காண்பிக்கப்பட்டிருந்தது.	அதனை எதிர்காலத்தில் சரி செய்வதற்கு குறிப்பிடப்பட்டுள்ளது.	நிதிக்கூற்றுக்களின் தகவல்கள் சமர்ப்பிக்கும் போது சரியானதாக இருத்தல் வேண்டும்.

(சௌ)	பாதீட்டு செயற்படு நிலை மற்றும் நிலுவை நிதியீட்டம் கூற்று குறிப்பு இலக்கம் 14 இன் மூலம் உள்நாட்டுக் கடன் மீளச்செலுத்துவதற்குரிய தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் 2024 ஆம் ஆண்டின் போது வெளிநாட்டுக் கடன் மீளச் செலுத்துதல் ரூபா 3,634,067 மில்லியனுக்குரிய தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.	வெளிநாட்டுக் கடன் மீளச் செலுத்துவதற்காக தனிப்பட்ட குறிப்பொன்று எதிர்காலத்தில் சமர்ப்பிப்பதற்கு முடியுமாக உள்ளது என அறியத்தருகின்றோம்.	தகவல்கள் சமர்ப்பித்தல் தொகை களுடன் காணப்படல் வேண்டும்.
(த)	மீளாய்வாண்டின் மேற்கொள்ளப்பட்ட சர்வதேச கடன் பிணை முறி மீள் கட்டமைப்பதற்குரிய அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களின் குறிப்பு இலக்கம் 26 (iv) இல் அடிக்குறிப்பின் மூலம் அந்நியச் செலாவணிக்கு (parity) கடன் கொடுத்தோர் கைவிட்ட கடன் அளவினையும் (Haircut) உள்ளடக்குகின்றமை காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிதிக்கூற்று வாசகர்களுக்கு சர்வதேச அபிவிருத்தி பிணைமுறி மீள்கட்டமைக்கும் போது கடன் உரிமையாளரி னால் கைவிடப்பட்ட கடனின் அளவை நேரடியாக இனங்காண்பதற்கு தவறியிருந்தது.	சர்வதேச பிணைமுறி மீள் கட்டமைக்கும் போது கடன் உரிமையாளர்களால் கைவிடப்பட்ட கடன் அளவு (Haircut Amount) நேரடியாக இனங்காண்பதற்காக தேவையான தகவல்கள் மசர்ப்பிக்கப்படாதிருந்தமை யால் கடன் உரிமையாளர்களி னால் கைவிடப்பட்ட அளவு தொடர்பான விபரங்கள் நிதிக் கூற்றுக்களில் தனித்தனியாக வெளிப்படுத்தமுடியாதிருந்தது.	நிதிக் கூற்றுக்கள் வாசகர்களுக்கு முக்கியமான தகவல்களை முழுமையாக வெளிப்படுத்ததுல் வேண்டும்.
(தா)	மானியதாரரால் அனுப்பப்பட்டிருந்த கடன் மீதி உறுதிப்படுத்துதல், அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களுடனும், கணினிமயப்படுத்தப்பட்ட கணனி முகாமைத்துவ முறைமை Stock and Flow Report No.1 அறிக்கையுடன் ஒப்பீடு செய்யும் போது கடன் இலக்கம் 19900099 இற்குரிய ரூபா 787,553 அதிகரித்தும், கடன் இலக்கம் 2024001 இற்குரிய ரூபா 87 மில்லியன் குறைத்தும் அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்களில் அறிக்கையிடப்பட்டிருந்தது.	பல்வேறு நாணயமாற்றுக் குறிப்புக்களில் இடப்பட்டுள்ள தகவல்கள் இந்தக் கடனின் உண்மையான நாணயமாற்று முறைமையினால் (Dominated Currency) பரிமாற்றம் செய்யும் போது ஏற்பட்டிருந்த நாணயமாற்று வேறுபாட்டின் காரணமாக உரிய முரண்பாடுகள் ஏற்பட் டிருந்தது. அந்த முரண்பாடுகள் தற்போது சரிசெய்யப்பட்டுள்ளது. மேலும் 2024.12.31 இல் உள்ளவாறு உரிய 2025.01.31 ஆந் திகதி தாயரிக்கப்பட்ட Stock and Flow Report அறிக்கையில்	அரச கடன் பெறல், கடன் சேவையிடல் அறிக்கையிடல் மற்றும் கணக்கீடு செய்தல் முறையான பிரகாரம் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

		2024.12.20 இல் உள்ளவாறு மேற்கொள்ளப் பட்ட மீள வழங்கல் (Refund) முறைமையின் சரியான தன்மையை சரியாக நாளதுவரையாக்கப்பட்டுள் ளது. எனினும் உரிய கடன் கொடுத்தோரால் 2024.12.31 இற்குரிய அனுப்பப்பட்ட மீதியில் அந்த மீள் அனுப்பல் (Refund) அந்த மீதி பெறப்பட்ட சந்தர்ப் பத்தில் நாளதுவரையாக் கப்படாமல் கொண்டுவரப் பட்டிருந்தது.	
(தி)	மீளாய்வாண்டில் தலைப்பு 122 சுற்றுலா மற்றும் காணி அமைச்சு மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் வாடகை மற்றும் வேலை முற்பணக் கணக்குகள் தொடர்பான கூற்று (ACA5 (பீ)) உள்ளடக்கப்படாதிருந்ததுடன் அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்களில் அந்த செலவினத் தலைப்பிற்குரிய 2024 திசம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2.8 மில்லியன் மீதி காணப்பட்டது.	சகல செலவின அலகுகளினாலும் நிதிக் கூற்றுக்கள் தயாரித்து கணக்காய்விற்கு சமர்ப்பிக்கும் போது பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர், கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் பிரதான நிதி உத்தியோகத்தர் / பிரதான கணக்காளரால் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்படுகின்ற கூற்றுக்களுக்குரிய செலவின அலகுகளில் உள்ளடக்கிய தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் இணக்கம் செய்யப்பட்டமை உறுதிப்படுத்தப்படுகின்றமை யால் அவ்வாறு திறைசேரி புத்தகங்களுடன் இணக்கம் செய்யப் படாத தகவல்கள் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பித்தல் தொடர்பாக அவர்கள் தனிப்பட்ட ரீதியில் பொறுப்புக் கூறுதல் வேண்டும்.	உரிய நிறுவனங்களுட ன் வாடகை வேலை, முற்பண மீதிகள் இணக்கம் செய்ய வேண்டியிருந்தது டன் தேவையான சரிசெய்தல்கள் மேற் கொள்ளப்படல் வேண்டும்.

(தீ)	தலைப்பு 123 நகர அபிவிருத்தி நிர்மாணம் மற்றும் வீடமைப்பு அமைச்சின் நிதிக்கூற்றுல் ACA 5(பீ) படிவத்திற்குரிய மீளாய்வாண்டின் ஆரம்ப மீதியாக குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 586 மில்லியன் வாடகை மற்றும் வேலை முற்பணம் அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களில் மீளாய்வாண்டில் சேர்த்தலின் கீழ் காண்பிக்கப்பட்டிருந் தமை அவதானிக்கப்பட்டது.	மேற்படி	மேற்படி
(து)	அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் தலைப்பு 219 விளையாட்டுதுறை அபிவிருத்தி திணைக்களத்தின் வாடகை மற்றும் வேலை முற்பணக் கணக்கிற்குரிய ரூபா 5.7 மில்லியன் ஆன ஆரம்ப மீதி மீளாய்வாண்டின் போது அறவிடப்பட்டிருந்தமை குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் உரிய நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்களில் அப்பெறுமதி ஆண்டின் இறுதி மீதியாக காண்பிக்கப்பட்டிருந்தது.	மேற்படி	மேற்படி
(தூ)	அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டில் தலைப்பு 337 கறுவா அபிவிருத்தி திணைக்களத்தின் முற்பணக் கணக்கில் ஆரம்ப மற்றும் இறுதி மீதி ரூபா 22 மில்லியன் ஆக மாற்றமின்றி காணப்பட்ட போதிலும் உரிய திணைக்களத்தின் நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பாக எந்தப் பதிவும் காணப்படவில்லை.	பதிலளிக்கப்படவில்லை	மேற்படி
(தெ)	பொதுத் திறைசேரியால் 2024 திசம்பர் 31 ஆந் திகதி வரை அரசாங்கத்தால் 06 பொது முயற்சிகளுக்கு மூலதன பங்களிப்பாக ரூபா 218,245 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. அந்த முதலீட்டின் பெறுமதி 2023 திசம்பர் 31 இல் உள்ளவாறு அப்பெறுமதி ரூபா 204,367 மில்லியன் ஆக இருந்ததுடன் அந்த நிறுவனங்களின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசம்பர் 31 இல் உள்ளவாறு அவற்றின் தேறிய சொத்துக்கள் (மொத்த சொத்துக்கள் - மொத்த வெளிப்பொறுப்புக்கள்) பெறுமதி	நட்டம் கிடைக்கின்ற தொழில் முயற்சிகளின் நட்டத்தைக் குறைத்துக் கொள்வதற்காக மற்றும் இலாபம் பெறும் நிலைமையைக் கொண்டுவருதவதற்காக வியாபத் திட்டங்கள் தயாரித்து அமுல்படுத்துமாறு பொது முயற்சிகள் திணைக்களத்தால் ஆலோசனை	அரச உரிமைத் தன்மையுடன் உள்ள நிறுவனங்களின் நிதி நிலைமை கால ரீதியில் மதிப்பீட்டிற்கு உட்படுத்தி அவற்றின் பெறுமதிகளை குறைத்து அரசாங்கத்தின் நிதிக்

	மறை ரூபா 412,450 மில்லியன் ஆகக் காணப்பட்டது. அதன் பிரகாரம் அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களில் நிதிச் சொத்துக் களின் கீழ் மூலதன பங்களிப்பு சொத்தொன்றாக காண்பிக்கப்பட்டிருந்த போதும் அப்பெறுமதி முழுமையாக வழக்கிழந்து (impairment) உரிய நிறுவனம் முழுமையாக வெளிப்பெறுப்பின் கீழ் பேணிச் செல்லுகின்ற நிலைமைக்கு உட்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.	வழங்கப்பட்டுள்ளது.	கூற்றுக்களில் சரியான பிரகாரம் அல்லது உரிய பிரகாரம் வெளிப்படுத்துதல் வேண்டும்.
(தே)	மீளாய்வாண்டில் ஆரம்ப திகதியில் மற்றும் இறுதித் திகதியில் ரூபா 1,935,429 மில்லியன் அரசாங்கத்தின் மூலப் பெறுமதியுடன் 05 தொழில் முயற்சிகள் 2023 திசம்பர் 31 இல் உள்ளவாறு தேறிய சொத்துக்களின் பெறுமதி ரூபா 550,744 மில்லியன் மாத்திரமாக இருந்தது. அதன் பிரகாரம் பொது முயற்சிகளில் முதலீடு செய்யப்பட்ட மூலதனப் பங்களிப்பு பெறுமதி வழக்கிழந்திருந்தமைக்கு (impairment) உட்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.	நட்டம் கிடைக்கின்ற தொழில் முயற்சிகளின் நட்டத்தைக் குறைத்துக் கொள்வதற்காக மற்றும் இலாபம் பெறும் நிலைமையைக் கொண்டுவருதவதற்காக வியாபாரத் திட்டங்கள் தயாரித்து அமுல்படுத்துமாறு பொது முயற்சிகள் திணைக்களத்தால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.	மேற்படி
(தை)	21 பொது முயற்சிகளினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட நேர் மீதி உறுதிப்படுத்தலின் பிரகாரம் மூலதன பங்களிப்பு மற்றும் 2024 திசம்பர் 31 இல் உள்ளவாறு அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட அரசாங்கத்தின் மூலதன பங்களிப்புக்கிடையே ரூபா 25,898 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது.	ஏற்றுக்கொள்கின்றோம்.	அரச உரிமைத் தன்மையுடன் உள்ள நிறுவனங்களுடன் கால ரீதியில் மீதிகளை உறுதிப்படுத்தி மதிப்பீட்டிற்கு உட்படுத்தி சரியான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் கணக்குகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவத்றகும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(தொ)	Sri Lanka Institute of Biotechnology (Pvt) Ltd. நிறுவனத்திற்குக் கிடைத்த நேர் உறுதிப்படுத்திலின் பிரகாரம் 2024 திசம்பர் 31 இல் உள்ளவாறு பங்கொன்றின் விலை ரூபா 10 ஆன 52,472,574 ஆன பங்குகள் பொதுத் திறைசேரிக்கு சொந்தமாக இருந்தவை குறிப்பிடப்பட்டதுடன் 2024 திசம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மொத்த மூலதனப் பங்களிப்பு ரூபா 525 மில்லியன் ஆகும். எனினும் 2024 திசம்பர் 31 இல் உள்ளவாறு அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் இந்தப் பெறுமதிக்கு மேலதிகமாக ரூபா 772 மில்லியன் மூலதன பங்களிப்பு மீதியொன்று காணப்பட்டது.	ஏற்றுக்கொள்கின்றோம்.	மேற்படி
(தோ)	08 பொது முயற்சிகளுக்குரிய 2024 திசம்பர் 31 இல் உள்ளவாறு அந்த நிறுவனங்களின் நிதிக் கூற்றுக் களின் பிரகாரம் மூலதனப் பங்களிப்பு ரூபா 1,150,312 மில்லியனாக இருந்ததுடன் அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் அந்த மீதி ரூபா 1,167,570 மில்லியன் ஆனமையின் காரணமாக அத் திகதியில் அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களில் மூலதன பங்களிப்பு ரூபா 17,258 மில்லியன் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது.	ஏற்றுக்கொள்கின்றோம்	மேற்படி
(தௌ)	06 அரச கம்பனிகளின் உரிமைத் தன்மையுள்ள பங்குகளின் எண்ணிக்கை மற்றும் அதன் பேரளவு பெறுமதியின் பிரகாரம் கணிப்பிடும் போது 2024 திசம்பர் 31 இல் உள்ளவாறு பெறுமதி ரூபா 6,549 மில்லியனாக இருந்த போதிலும் அது அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்களில் ரூபா 15,893 மில்லியனாக காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2024 திசம்பர் 31 இல் உள்ளவாறு அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களில் மூலனப் பங்களிப்பு ரூபா 9,344 மில்லியன் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	இந்த வேறுபாடுகளுக்கு தாக்கமளித்த காரணங்களை மேலும் ஆராய்ந்து தேவையான சரிசெய்தல் எதிர்காலத்தில் மேற்கொள்ளுவதற்கு நடவக்கை எடுக்கப்பட்டுள்ளது.	மேற்படி
(ப)	நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டில் அரசாங்கத்திற்கு சொந்தமான தொழில் முயற்சிகளில் மூலதனப் பங்களின் அதிகரிப்பு ரூபா 87,285 மில்லியன் ஆக இருந்ததுடன் அதில் ரூபா 33,674 மில்லியன் அதாவது	அரசாங்கத்தின் கொள்கையின் பிரகாரம் பொது முயற்சிகளின் தொழிற்படு மூலதன தேவை இருக்குமாயின் நாளாந்த வியாபார	மீண்டெழும் வடிவிலுள்ள செலவினங்களை ச் செய்வதன் மூலம் நிறுவனங்களின்

	38 சதவீதம் ஒவ்வொரு நிறுவனங்களினதும் மீன்டெழும் வடிவிலான அதாவது கடன் மற்றும் கடன் வட்டி செலுத்துதல், சம்பளம் மற்றும் வேதனம் செலுத்துவதற்காக பொதுத் திறைசேரியிலிருந்து விடுவிக்கப்பட்ட தொகைகளை உள்ளடக்கி இருந்தது.	நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது செய்ய வேண்டி ஏற்படுகின்ற மீண்டெழும் வடிவிலான செலவினங்களைச் செய்வதற்கு திறைசேரியிலிருந்து நிதியினைப் பெற்றுக் கொள்ளல் அரசாங்கத்தின் முதலீடொன்றாக கருதி நடவடிக்கை எடுத்தல் பொருத்தமானது என சுட்டிக் காட்டுகின்றோம்	மூலதனப் பங்களிப்பை அதிகரிக்கா திருந்தமையால் அதற்காக உரிய திட்டமொன்று பின்பற்றப்படல் வேண்டும்.
(பா)	2024 திசம்பர் 31 இல் உள்ளவாறு 12 தொழில் முயற்சிகளுக்காக அரசாங்கத்தின் மூலதனப் பங்களிப்பு ரூபா 11,601 மில்லியனாக காண்பிக்கப்பட்ட போதிலும் அதற்குப் பதிலாக பொதுத் திறைசேரியின் உரிமை பங்குகளின் எண்ணிக்கை அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	இந்த நிறுவனங்களுக்குரியதாக மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளின் பெறுமதி அரசாங்கதின் நிதிக் கூற்றுக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் அதற்கு நேரொத்த பங்கு சான்றிதழில் இருந்து கிடைத்தவுடன் பங்குகளின் எண்ணிக்கையும் அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களில் நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	பொதுத் திறைசேரியினால் வழங்கப்படுகின்ற மூலதனப் பங்களிப்பிற்காக பங்குச் சான்றிதழ் விரைவாகப் பெற்றுக்கொள்வ தற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது டன் பங்குளின் எண்ணிக்கையும் வெளிப்படுத்தப்ப டல் வேண்டும்.
(பி)	09 தொழில் முயற்சிகளுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட நேர் உறுதிப்படுத்தலின் பிரகாரம் மற்றும் அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் அந்த பொது முயற்சிகளுக்குரிய பொதுத் திறைசேரிக்குரிய பங்கு உரிமைத் தன்மையின் சதவீதத்தில் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டது.	எதிர்காலத்தில் அது தொடர்பாக அதிக கவனம் செலுத்தி உரிய கம்பனிகளின் ஒத்துழைப்பையும் பெற்று பங்குகளின் எண்ணிக்கையின் சதவீதத்தில் சரியாக உறுதிப்படுத்திக் கொண்ட பின்னர் அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	மேற்படி

(பீ)	2024 திசம்பர் 31 இல் உள்ளவாறு அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களில் குறிப்பு இலக்கம் 17 இன் பிரகாரம் அரசாங்கத்திற்குச் சொந்தமான கம்பனிகள் மற்றும் ஏனைய கம்பனிகளுக்காக மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்ட மூலதனப் பங்களிப்பு ரூபா 42,356 மில்லியன் ஆக இருந்த போதிலும் ஆண்டில் மூலனப் பங்களிப்பில் ரூபா 10,699 மில்லியன் அதிகரிப்பிற்குரிய பங்குரிமை மாற்றங்களை உள்ளடக்கிய ஏனைய தகவல்கள் தொடர்பாக முறையாக வெளிப்படுத்தலொன்று மேற்கொள்ளாமல் மீளாய்வாண்டின் இறுதி மூலதன முதலீட்டுப் பெறுமதியாக மாத்திரம் காண்பிக்கப்பட்டதுடன் அந்த முதலீடுகளுக்குரிய தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.	2024 ஆம் ஆண்டில் அரசாங்க நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள அரசாங்கத்தின் மூலதன பங்களிப்புக்கள் அதிகரித்ததன் மூலம் நிதியத்தில் இந்த ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட முதலீட்டின் பெறுமதிகளின் பிழையினை சரி செய்வதற்காக மேற் கொள்ளப்பட்ட சீராக்கம் உள்ளடக்கப்படுவதாக குறிப்பிடுகின்றோம்.	முழுமையான தகவல்களும் நிதிக்கூற்றுக்களில் குறிப்புக்களில் உள்ளடக்குதல் வேண்டும்.
(பு)	திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் ரூபா 14.6 மில்லியனான வெளிநாட்டு மானியம் உரிய நோக்கங்களுக்கு பயன்படுத்தப்படாமல் மீளாய்வாண்டில் அரச வருமானத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது.	வைப்புக் கணக்கிற்குரிய 2021.10.22 ஆந் திகதி கிடைக்கப்பெற்ற ரூபா 1,860,000 தொகை அந்த செயற்திட்டம் 2024 ஆம் ஆண்டு வரையிலும் அமுல் படுத்தப்படாமையின் அடிப்படையில் உரிய அமைச்சில் இருந்து பல சந்தர்ப்பங்களின் போது விசாரணை செய்யப்பட்ட பின்னர் மற்றும் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் அந்த தொகை அரசாங்கத்தின் வருமானத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. மீதியான 06 செயற்திட்டங்களை அமுல்படுத்திய பின்னர் ஒவ்வொரு செயற்திட்டத்திலும் சேமிக்கப்படுகின்ற பணம் ரூபா 12,752,424 உடன்படிக்கையின் பிரகாரம் அரசாங்கத்தின் வருமானத்தை செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	பங்களிப்பாளர்களின் நம்பிக்கையை உறுதிப்படுத்தும் வகையில் கிடைக்கின்ற வெளிநாட்டு மானியங்கள் உரிய நோக்கங்களுக்கு ஈடுபடுத்துதல் தொடர்பாக இணைப்பினையும் ஒழுங்குபடுத்தலையும் வலுப்படுத்துதல் வேண்டும்.

(பூ)	2024 சனவரி 01 ஆம் திகதி வரையிலும் இலங்கை அரசாங்கத்திற்கு மானியமாக கிடைக்கப்பெற்ற போதும் 2024 திசம்பர் 31 ஆந் திகதி வரையிலும் உரிய நோக்கங்களுக்கு ஈடுபடுத்தாமல் செயலிழந்து காணப்பட்ட வெளிநாட்டு மானிங்களின் ரூபா 36.8 மில்லியன் ஆகும்.	ஒவ்வொரு வைப்புக் கணக்கிற்கும் உரிய ரூபா 15,013,178 தொகை தொடர்பாக திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தினால் உரிய திணைக்களத்திற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் அதற்காக 2025.04.10 ஆந் திகதிய கடிதம் மூலம் மேலும் நிதியை நிறுத்தி வைக்குமாறு அந்த திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் வைப்புக் கணக்கில் காணப்படுகின்ற ரூபா 782,916 தொகை 2025 ஆம் ஆண்டின் போது பயன்படுத்துவதற்காக உரிய அமைச்சினால் வரவு செலவுத்திட்ட திணைக்களத்தில் இருந்து நிதி ஏற்பாடு கோரப்பட்டுள்ளது. அவ்வாறே 08 சேமிப்பு வைப்புக் கணக்குகளுக்கு உரியதாக காணப்படுகின்ற வைப்புப் பணம் உரிய விடயங்களுக்கு பயன்படுத்துமாறு திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தால் உரிய அமைச்சு / திணைக்களத்திற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	உரிய மானியங்கள் கிடைக்கப்பெற்ற நோக்கங்களை நிறை வேற்றுவதற்கு உரிய நிறுவனங்கள் செயற்படுவதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(பெ)	1994 ஏப்ரல் 20 ஆந் திகதிய இலக்கம் 30/94 என்ற அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் வெளி நாட்டு உதவி தொடர்பாக சகல கொடுக்கல் வாங்கல்களும் பொதுத் திறைசேரியின் வெளிநாட்டு வழங்கல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தால் மேற்கொள்ள வேண்டியிருந்தமை குறிப்பிடப்பட்ட போதும் தெரிவுப் பரிசோதனையின் அடிப்படையில் தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டில் பொதுத் திறைசேரிக்கு அறிவிக்காமல் 08	1994.04.20 ஆம் திகதிய இலக்கம் 30/94 என்ற சுற்றறிக்கைகள் போன்று பல்வேறு சுற்றறிக்கைகள் மற்றும் ஆலோசனைகளின் மூலமும் சுட்டிக்காட்டப் பட்டுள்ள பிரகாரம் உரிய திட்டத்தின்படி வெளிநாட்டு வழங்கல் திணைக்களத்திற்கு அறிவித்து பெறப்படுகின்ற	சுற்றறிக்கை ஆலோசனை யின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டி யிருந்ததுடன் உரிய நிறுவனங்கள் அது தொடர்பாக தொடர்ச்சியாக அறிவித்து பின்தொடர்

	நிறுவனங்கள் கூட்டுமொத்தமாக ரூபா 1,047.6 மில்லியன் வெளிநாட்டு மானியத்தை நேரடியாக பெற்றிருந் தது. அதன் பிரகாரம் வெளிநாட்டு வழங்கல் திணைக்களத்திற்கு தெரியப்படுத்தாமல் பல்வேறு தரப்பினருக்கு வெளிநாட்டு மானியம் நேரடியாக பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பம் காணப்படுகின்றமையும் அதன் காரணமாக வெளிநாட்டுதவி தொடர்பாக தேசிய ரீதியில் தயாரிக்கப்படுகின்ற தகவல்களின் முழுமையான தன்மை தொடர்பான பிரச்சினைகள் எழுந்தமை, உரிய ஒழுங்குபடுத்துதல் இன்றி வெளி நாட்டு மானியம் பெறப்பட்டமை மற்றும் பயன்படுத்தும் ஆபத்து காணப்பட்டமை, அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களில் பிழையான தகவல்கள் உள்ளடங்கியிருந்தமை, பிழையான தகவல்களை அடிப்படையாகக் கொண்டு அரசாங்கத்தின் கொள்கை ரீதியான தீர்மானம் எடுக்கும் ஆபத்துக்கள் ஏற்பட்டிருந்தமை போன்ற பாதகமான நிலைமை ஏற்படக்கூடியதாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.	மானியங்கள் தொடர்பாக இந்த திணைக்களத்தால் உரிய பிரகாரம் பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றது. ஏனைய நிறுவனங்களுக்கு மாத்திரம் அறிக்கையிடப்பட்ட மானியங்கள் தொடர்பாக அந்த சுற்றறிக்கை ஆலோசனை கோவை மற்றும் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் சகல அமைச்சு செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், நியதிச்சட்ட நிறுவனங்களின் தலைவர்களின் பொறுப்பாகும்.	நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.
(பே)	2019 சனவரி 01 ஆந் திகதி முதல் 2024 திசம்பர் 31 ஆம் திகதி வரை வெளிநாட்டு மானியங்களைப் பெற்றுக் கொள்வதற்காக பொதுத் திறைசேரியினால் வெளிநாட்டு மானிய செயற்திட்டங்கள் 03 உடன் கூட்டுப் பெறுமதி அமெரிக்க டொலர் 18 மில்லியன், ரூபா 290 மில்லியன் மற்றும் கொரியன் வொன் 14.3 பில்லியன் ஆன உடன்படிக்கைகளில் கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதற்குரிய வெளிநாட்டு மானியம் கிடைத்தமை கணக்காய்விற்கு உறுதிப்படுத்தவில்லை.	இந்த 03 செயற்திட்டங்களுக் கான மானியங்கள் 2024 திசம்பர் 31 ஆந் திகதி வரையிலும் கிடைத்திருக்கவில்லை.	இலங்கை அரசாங்கத்தால் உடன்படிக் கைகளுக்கு கைச்சாத்திடப்பட் ட வெளி நாட்டு மானியம் முழுமையாக பெற்று ஆகக் கூடிய வகையில் நோக்கங்களை ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(பை)	செலவினத் தலைப்பு 11 இற்குரிய அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசம்பர் 31 இல் உள்ளவாறு கட்டுநிதி கணக்குகளில் ரூபா 43 மில்லியன் மீதி காணப்பட்ட போதிலும் அந்த ஒவ்வொரு நிறுவனங்களினதும்	இந்த மீதியில் 2025 சனவரி 01 இற்கும் 06 இற்கும் இடையிலான தினங்களின் போது திறைசேரிக்கு தீர்க்கப்பட்டுந்தமையால் ஒவ்வொரு நிறுவனத்தின்	கணக்காண்டின் இறுதியின் போது கட்டுநிதி மீதி உரிய பிரகாரம் தீர்த்து வைப்பதற்கு

	நிதிக் கூற்றுக்களில் (ACA-3) திறைசேரியின் ஏடுகளின் பிரகாரம் அத் திகதியில் மீதி காணப்படவில்லை. மேலும் செலவினத் தலைப்புக்குரிய அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட கட்டுநிதி கணக்கு இலக்கம் உரிய நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் குறிப்பிடப்பட்ட கட்டுநிதி இலக்கம் மற்றும் இணக்கம் செய்யப்படாத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.	நிதிக்கூற்றுக்களின் மீதி ஒன்று இல்லாது இருந்ததாக காண்பிக்கப்பட்ட போதிலும் சிகாஸ் கணனி அச்சிடல் குறிப்புக்களில் காண்பிக்கப்படுகின்ற மீதி அத் திகதியில் திறைசேரி புத்தகங்களின் பிரகாரம் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. மேலும் சிகாஸ் (CIGAS) கணக்கீட்டு முறைமை ஊடாக ஒவ்வொரு நிறுவனமும் அறிக்கையிடுகின்ற தகவல்கள் அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது. இந்த தகவல்கள் சரியான பிரகாரம் திணைக்கள நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு உரிய திணைக்களத்தின் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு உரிய பொறுப்பாகும்.	நடவடிக்கை எடுக்க வேண்யிருந்ததுடன் ஒவ்வொரு நிறுவனத்துடனும் இணக்கங்கள் கால ரீதியில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
(பொ)	அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களில் வைப்பு மீதியுடன் இணக்கம் செய்யும் போது மீளாய்வாண்டின் ஆரம்பத்தின் போதும் இறுதியின் போதும் வைப்புக்களின் மீதி முறையே ரூபா 19 மில்லியன் மற்றும் ரூபா 16 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டதுடன் 14 நிறுவனங்களுக்குரிய 02 வருடங்களுக்கு மேற்பட்ட 40 வைப்புக் கணக்குகளில் கூட்டுமொத்தமான ரூபா 2,284 மில்லியன் ஆன மீதி காணப்பட்டது.	வைப்புக் கணக்கு தொடர்பாக நிதிப்பிரமாணம் 427 இன் பிரகாரம் இணக்கம் மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் பொது வைப்புக் கணக்குகளில் மீதிகளை தீர்த்து வைத்து செல்வதற்காகவும், காலாவதியான வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் உரிய நிறுவனங்களின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மேலும் நியாயமான காரணங்களுக்கு மேலதிகமாக ஏனைய	நிறுவனத்துடன் மீதிகளை இணக்கம் செய்ய வேண்டியிருந்ததுடன் நீண்டகாலமாக காணப்படுகின்ற வைப்பு மீதிகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

		காரணங்கள் மற்றும் அவ்வாறு காரணங்கள் சமர்ப்பிக்கப்படாத நிறுவனங்களிடம் விசாரணை செய்து எங்களால் மேற்கொள்ளப்படுகின்றது.	
(போ)	2024 திசம்பர் 31 இல் உள்ளவாறு அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மத்திய அரசின், அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண மீதி ரூபா 32,268 மில்லியனாக இருந்த போதிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக் கப்பட்ட காலப் பகுப்பாய்வின் பிரகாரம் அந்த மீதி ரூபா 31,370 மில்லியன் ஆகும். அதன் பிரகாரம் ரூபா 898 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது.	அமைச்சு/ திணைக்களத்தால் அனுப்பப்படுகின்ற முற்பணம் பீ கணக்குகளில் தனிப்பட்ட மீதி மற்றும் திறைசேரி மீதிகளுக்கு இடையே காணப்படுகின்ற வேறுபாடுகளை தீர்த்து வைப்பதற்காக நடவடிக்கை எடுக்குமாறு உரிய நிறுவனங்களுக்கு ஆலோசனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	அறவிட வேண்டிய முற்பண மீதிகளை தீர்த்து வைப்பதற்காக விரைவாக நடவடிக்கை எடுத்து முறைமையை அபிவிருத்தி செய்தல் வேண்டும்.
(பௌ)	உபகடன் வழங்கிய நிறுவனங்களில் இருந்து கிடைத்த கடன் மீதி உறுதிப்படுத்தல் கடிதங்களுடன் ஒப்பீடு செய்யும் போது மீளாய்வாண்டின் ஆரம்பத்தின் போதும் இறுதியின் போதும் அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களில் உபகடன் மீதி முறையே ரூபா 717.1 மில்லியன் மற்றும் ரூபா 1,127.8 மில்லியன் வேறுபாடு காண்பிக்கப்பட்டிருந்தது.	இலங்கை மத்திய வங்கியின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற மிகவும் பழைய 03 கடன் உடன்படிக்கைகள் நீண்ட காலம் முதல் செயற்பாடற்ற நிலையில் காணப்படுவதுடன் புதிய இலங்கை மத்திய வங்கி சட்டத்தின் கீழ் இந்த கடன் திட்டம் மற்றும் வங்கியினால் நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியாதிருந்தமையால் இந்த மீதி இலங்கை வங்கி, மக்கள் வங்கியினால் திறைசேரிக்கு கையளிப்பதற்காக அறிக்கை ஒன்றை வழங்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் ஸ்வ சக்தி கடன் முன்மொழிவுத் திட்டத்தின்	உப கடன் மீதிகள் உரிய நிறுவனங்களுடன் கால ரீதியில் இணக்கம் செய்து சரியான பிரகாரம் கணக்கு வைத்தல் வேண்டும்.

		கீழ் இலங்கை மத்திய வங்கியினால் மானியமாக ரூபா 12,470,795 தொகை செலவிடப்பட்டதுடன் அது தொடர்பான தகவல்கள் கோரப்பட்டதன் பின்னர் கணக்கீட்டு முறைமையை சரி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக திறைசேரியின் ஏடுகள் மற்றும் உரிய நிறுவனத்தின் ஏடுகளில் உபகரணங்களை வழங்குதல் மற்றும் மீள அறவிடல் கணக்கீடு செய்யும் போது ஏற்பட்ட வேறுபாடுகள் இதற்கு காரணமாக இருந்தன.	
(ற)	வெளிநாட்டு நாயணங்கள் மூலம் பெறப்பட்டிருந்த திறைசேரி பிணைமுறி உள்நாட்டு பணமாக மாற்றும் போது அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட அந்நியச் செலாவணி மாற்ற விகிதம், வெளிநாட்டு வழங்கல் திணைக்களத்தின் மூலம் கணக்காய்விற்கு சமர்ப் பிக்கப்பட்ட நாணய மாற்று விகிதத்தில் மாற்றங்கள் காணப்பட்டதன் காரணமாக 2024 திசம்பர் 31 இல் உள்ளவாறு திறைசேரி பிணைமுறிகளின் பெறுமதி ரூபா 23,350 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது.	எதிர்காலத்தில் இவ்வாறான வேறுபாடுகள் ஏற்படுவதை தடுப்பதற்காக நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகின்றோம்.	ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலுக்கும் உரிய ஒவ்வொரு திணைக்களத்திற்கும் ஏதோ ஒரு குறித்துரைத்த திகதியில் ஒரே நாணய மாற்று விகிதத்தின் கீழ் மேற்கொள்வதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(றா)	நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கை அமைச்சினால் 2022 ஏப்ரல் மாதம் 12 ஆம் திகதி எடுக்கப்பட்ட இடைக்கால வெளிநாட்டு கடன் செலுத்துதல் கைவிடல் கொள்கை ரீதியான தீர்மானத்தின் படி 2022 ஏப்ரல் மாதம் 13 ஆம் திகதி முதல் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 334 கடன் உடன்படிக்கைகளுக்குரிய கடன் தவணைப் பணத்தில் உள்ளடக்கப்பட்ட செலுத்த வேண்டியதாகக் காணப்பட்ட ஆரம்ப கடன் தொகை செலுத்துதலாக ரூபா 479,674 மில்லியனும், வட்டியாக ரூபா 114,130 மில்லியனும் உள்ளடக்கி	எதிர்காலத்தில் தேவையான வெளிப்படுத்தல்களை உள்ளடக்குவதற்கு குறிப்பிடுகின்றோம்.	நிதிக் கூற்றுக்களில் வாசகர்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்த தகவல்கள் வெளிப்படுத்தப்படல் வேண்டும்.

	ரூபா 593,804 மில்லியன் கடன் மீளச் செலுத்துதல் கைவிடப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்களில் எந்தவொரு வெளிப்படுத்தலும் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் கடன் செலுத்துதல் தற்காலிகமாக கைவிடப்பட்டதன் காரணமாக 2022 ஏப்ரல் 12 ஆம் திகதி முதல் மேற்கூறப்பட்ட கடன் உடன்படிக்கைகளுக்கு உரிய பயன்படுத்தப்படாத மீதியின் அடிப்படையில் அர்ப்பணித்தல் கட்டணம் (Commitment Fee) செலுத்தும் போது சாதாரண அர்ப்பணித்தல் கட்டணப் பெறுமதி அல்லது கொடுப்பனவு தாமதமடைந்ததன் காரணமாக அப்பெறுமதியை விட உயர்ந்த பெறுமதியொன்று செலுத்துவதற்கு ஏற்படுகின்ற ஆபத்து காணப்படுகின்றமையும் கணக்காய்வின் போது மேலும் அவதானிக்கப்பட்டது.		
(றி)	2024 ஆம் ஆண்டில் கடன் மானியங்கள் வழங்கிய 04 நிறுவனங்களுடன் ரூபா 128,663 மில்லியனுக்காக கடன் உடன்படிக்கை செய்திருந்த போதிலும் அந்தக் உடன்படிக்கைகள் தேறியமை. 2024 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெறாதிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் அவ்வாறு உடன்படிக்கை செய்யப்பட்ட போதும் தேறாத கடன்களை பெற்றுக்கொள்ளல் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் வெளிப்படுத்தல்களை உள்ளடக்குவதற்கு குறிப்பிட்டுக் கொள்கின்றோம்.	மேற்படி
(றீ)	2024 திசம்பர் 31 இல் உள்ளவாறு ஆரம்ப நடவடிக்கைகள் முடிவடைந்திருந்த போதும் உடன்படிக்கை செய்யாத ரூபா 134 மில்லின் கடன்களைப் பெற்றுக்கொள்ளல் ஆன 03 கடன்களைப் பெற்றுக்கொள்ளல் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை.	கடன் பங்களிப்பாளர்களுடன் கடன்களை பெற்றுக் கொள்ளல் தொடர்பாக கலந்துரையாடல் நடாத்தப்பட்டுள்ளதுடன் எந்த ஒரு கடன் உடன்படிக்கையும் கைச்சாத்திடப்படாது இருந்தமையால் அரசாங்கத்திற்கு எந்த ஒரு செலவினப் பொறுப்பும் ஏற்படவில்லை.	மேற்படி

(று)	பொது முயற்சிகளில் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 05 பொது முயற்சிகளால் ரூபா 3,690 மில்லியன் பொதுத் திறைசேரிக்கு செலுத்த வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்ட போதிலும் அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களில் அந்த மீதிகள் உரிய நிறுவனங்களிலிருந்து கிடைக்க வேண்டியிருந்தமை இனங்காணப்பட்டிருக்கவில்லை.	அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்களில் ''நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிப்பதற்கான அறிக்கையிடப்படுகின்ற காலம் மற்றும் அளவிடல் முறைமை'' இன் கீழ் நடப்பாண்டிலும், முன்னைய ஆண்டுக்காவும் ஆன வருமானம் காசு அடிப்படையின் கீழ் கணக்கீடு செய்யப்படுகின்றது.	மேற்படி
(றூ)	திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி 2024 திசம்பர் 31 இல் உள்ளவாறு 28 நிறுவனங்களுக்கு உரியதாக வழங்கப்பட்ட உப கடனுக்காக பொதுத் திறைசேரிக்கு கிடைக்கவேண்டிய வட்டி பெறுமதி ரூபா 10,733 மில்லியன் ஆக இருந்த போதிலும் அது அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை.	பெற வேண்டிய வட்டிப் பெறுமதி நிலுவை வருமானம் அறிக்கையில் குறிப்பிடப்படுவதாக மாத்திரம் அறிவிக்கப்பட்டுள்ளது.	உபகடனுக்காக பொதுத் திறைசேரிக்கு கிடைக்க வேண்டிய வட்டி வருமானம் அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படத்தப்படல் வேண்டும்.
(றெ)	மீளாய்வாண்டில் அரசாங்கத்தில் நிதிக்கூற்றுக்களில் அரசாங்கத்தின் உரிமைப் பங்களிப்பு கொழும்பு பங்குச் சந்தையில் நிரற்படுத்தப்பட்ட கம்பனியிலிருந்து கிடைத்த முதலீடுகள் மற்றும் நிரற்படுத்தப்படாத கம்பனியில் இருந்து கிடைத்த முதலீடுகளாக வகைப்படுத்தி காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் கொழும்பு பங்குச் சந்தையில் நிரற்படுத்தப்பட்ட கம்பனிகளின் உரிமை தன்மையின் பெறுமதி அதன் பேரளவு பெறுமதியை அடிப்டையாகக் கொண்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அவற்றில் 2024 திசம்பர் 31 இல் உள்ளவாறான சந்தைப் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை.	அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது அரசாங்கத்தின் உரிமை பங்களிப்பு கொழும்பு பங்குச் சந்தையில் நிரற்படுத்தப்பட்ட கம்பனியில் மேற்கொள்ளப்பட்ட முதலீடு மற்றும் நிரற்படுத்தப்படாத கம்பனியில் மேற்கொள்ளப்பட்ட முதலீடு ஆக வகைப்படுத்தல் ஒன்று இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. எதிர்காலத்தில் கொழும்பு பங்புச் சந்தையில் நிரற்படுத்தப்பட்ட கம்பனிகளின் பங்குரிமையின் பெறுமதி பங்குகளுக்கு உரிய ஆண்டின் திசெம்பர் 31	நிதிக்கூற்றுக்கள் வாசகர்களுக்கு முக்கியத்துவம் ஆன தகவல்களை உச்ச அளவில் வெளிப்படுத்துதல் வேண்டும்.

		ஆந் திகதியில் உள்ளவாறு சந்தையின் பெறுமதியின் அடிப்படையில் வெளிப்படுத்துவதற்கு குறிப்பிடுகின்றோம்.	
(றே)	மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் ரூபா 84,114 மில்லியனாக வெளிப்படுத்தப்பட்ட போதிலும் தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் பிரகாரம் அதில் உள்ளடக்கப்படாத 21 நிறவனங்களுக்குரிய கூட்டுமொத்தம் ரூபா 58,367 மில்லியன் ஆன கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் காணப்படுகின்றமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது.	ஒவ்வொரு நிறுவனத்தினாலும் அறிக்கையிடப்படுகின்ற கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்திற்கு தரவேற்றம் தொடர்பான தெளிவான ஆலோசனை 2024 ஆம் ஆண்டிற்காக திறைசேரி புத்தகங்களைத் தீர்ப்பதற்கு உரிய அரச கணக்கு திணைக்கள வழிகாட்டி இலக்கம் 05/2024 இன் பந்தி இலக்கம் 4.8 இன் கீழ் மற்றும் உரிய கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் அறிக்கையிடுவதற்காக தேவையான படிவம் 2024 ஆம் ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்கான வழிகாட்டி இலக்கம் 06/2024 இல் உள்ளடக்கப்பட்டுள்ளது. அரச நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குதல் உரிய அறிக்கையிடப்படுகின்ற நிறுவனத்தினால் சிகாஸ் கணக்கீட்டு முறைமை ஊடாக திறைசேரிக்கு அறிக்கையிடப்படுகின்ற கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களின் பெறுமதியை உள்ளடக்கப்படுகின்றது.	அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்களில் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் முழுமையாகவும் சரியாகவும் வெளிப்படுத்துதல் வேண்டும்.

(றை)	கணக்காய்விற்கு கிடைத்த தகவல்களின் பிரகாரம் 15 நிறுவனங்களுக்குரிய பாதீட்டு நிதி ஏற்பாடு இன்றி கைச்சாத்திடப்பட்ட 90 நாட்களை விஞ்சிய பொறுப்புக்களின் கூட்டுமொத்தம் ரூபா 85,722 மில்லியன் மீளாய்வாண்டின் அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை.	சரியான பதில் மேற்படி கிடைத்திருக்கவில்லை.	
(றொ)	2023 இன் 34 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் மூன்றாவது பட்டோலையின் பிரகாரம் தலைப்பு 204 இற்குரிய அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கிற்கான பெறுவனவுகளின் ஆகக் குறைந்த எல்லை அடையப்படாதிருந்தது.	ஆகக் குறைந்த பெறுவனவு எல்லை ரூபா 4,850,000 ஆக திருத்தப்பட்டுள்ளது. எனினும் அந்த ஆகக் குறைந்த பெறுவனவு ரூபா 4,846,846 ஆகக் காணப்பட்டது.	ஒதுக்கீட்டுச் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட எல்லைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

2. செயற்பாட்டு மீளாய்வு

2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கு இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கு இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

	கணக்காய்வு அவதானிப்பு	இணக்கமின்மைகள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2003 இன் 3(1) ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்பு) அதிகாரச்சட்டம்	2021 இன் 12 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்பு) (திருத்தம்) அதிகாரச்சட்டத்தினால் மற்றும் 2013 இன் இலக்கம் 15 கொண்ட நிதி முகாமைத்துவ (பொறுப்பு) (திருத்தம்) அதிகாரச்சட்டத்தினால் திருத்திய 2003 இன் இலக்கம் 3 கொண்ட நிதி முகாமைத்துவ (பொறுப்பு) அதிகாரச்சட்டம் பிரகாரம், ஏதேனும் ஆண்டு இறுதியில் காணப்பட முடியுமான உச்ச பொறுப்பு பெறுமதி அவ்வாண்டிற்கான மதிப்பிடப்பட்ட மொத்த தேசிய உற்பத்தியின் 80 சதவீதத்தை விஞ்சக்கூடாத போதும் 2024 திசெம்பர் 31 திகதி வரையில் அவ் எல்லை 94.39 சதவீதம் ஆக இருந்தது. விபரம் பின்வருமாறு.	பதில் கிடைத்திருக்க வில்லை.	சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

பொறுப்புக்கள்	2024 திசெம்பர் 31 திகதியன்று பொறுப்புக்கள் பெறுமதி ரூபா பில்லியன்
வங்கி மேலதிக பற்று	105
மத்திய வங்கி முற்பணம்	-
அரசாங்க கடன்கள்	29,627
நிதிக்கூற்றுக்களினூடாக கணக்கீடு செய்யப்படாத பொறுப்பு	
- கணக்கீடு செய்யப்படாத வெளிநாட்டுக் கடன்-	01
மொத்த பொறுப்புக்கள்	**29,733**
மதிப்பிடப்பட்ட மொத்த தேசிய உற்பத்தி	31,500
மொத்த பொறுப்புக்கள் மதிப்பிடப்பட்ட மொத்த தேசிய உற்பத்தியின் சதவீதமாக (%)	**94.39**

* பொது திறைசேரியின் பிணைமுறி மீது அரச முயற்ச்சிகள் மூலம் பெற்றுக் கொண்டுள்ள கடனிற்காக வங்கிக்கு வழங்கியுள்ள பிணைமுறி மற்றும் நிவாரணக் கடித பெறுமதியான ரூபா 1,454 பில்லியன் மற்றும் அமைச்சு, திணைக்களம் மற்றும் விஷேட செலவு அலகுகளில் கணக்காய்விற்கு சமர்ப்பித்த பொறுப்புக்கள மற்றும் கடப்பாடுகள் கூற்று பிரகாரம் ரூபா 84 பில்லியன் பெறுமதியான பொறுப்புக்கள் மேற்குறிப்பிட்ட பொறுப்புக்களிற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) 2003 இன் இலக்கம் 3 கொண்ட நிதி முகாமைத்துவ (பொறுப்பு) சட்டத்தின் 3(அ) பிரிவின் பிரகாரம் ‘‘2006 ஆண்டிறுதியில் வரவுசெலவுத் திட்ட இடைவெளி, அவ் ஆண்டிற்காக மதிப்பிடப்பட்ட மொத்த தேசிய உற்பத்தியின் ஐந்து சதவீதத்தை விட அதிகமாக இல்லை என்பதையும், அதன் பின்னர் அந்த நிலைமையினை தொடர்ந்து பேணிச் செல்வதனை உறுதிசெய்வதன்	பதில் கிடைத்திருக்க வில்லை.	சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

மூலமும் அரச கடனை விவேகமான அளவிற்குக் குறைத்தல்'' அரசாங்கத்தினால் கடைபிடிக்க வேண்டிய பொறுப்புவாய்ந்த நிதி முகாமைத்துவத்திற்கு அடிப்படையான நோக்கமாக காட்டப்படுகிறது. எனினும் மீளாய்வாண்டின் மதிப்பிடப்பட்ட பாதீட்டு இடைவெளியை, மதிப்பிடப்பட்ட மொத்த தேசிய உற்பத்தியின் ஐந்து சதவீதத்தை விஞ்சாதவாறு மதிபிடவும், மீளாய்வாண்டு இறுதியிலான உள்ளவாறான பாதீட்டு இடைவெளி, மதிப்பிடப்பட்ட மொத்த தேசிய உற்பத்தியின் ஐந்து சதவீதத்தை விஞ்சாதவாறு பேணிச் செல்ல நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கை அமைச்சிற்கு இயலாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம், மீளாய்வாண்டில் அந்த சதவீதங்கள் முறையே மதிப்பிடப்பட்ட பாதீட்டு இடைவெளிக்குரியதாக 9.93 சதவீதம் மற்றும் உள்ளவாறான பாதீட்டு இடைவெளிக்குரியதாக 6.75 சதவீதமாக காணப்பட்டது. விபரங்கள் பின்வருமாறு.

பாதீட்டு இடைவெளி

மதிப்பிடப்பட்ட மொத்த தேசிய உற்பத்தி	மதிப்பிடப்பட்ட	உள்ளவாறான	மதிப்பிடப்பட்ட பாதீட்டு இடைவெளி, மதிப்பிடப்பட்ட மொத்த தேசிய உற்பத்தியின் சதவீதமாக	உள்ளவாறான பாதீட்டு இடைவெளி, மதிப்பிடப்பட்ட மொத்த தேசிய உற்பத்தியின் சதவீதமாக
ரூபா பில்லியன்	ரூபா பில்லியன்	ரூபா பில்லியன்	சதவீதம்	சதவீதம்
31,500	3,128	2,126	9.93	6.75

குறிப்பு –
2024 ஆகஸ்ட் 08 ஆந் திகதி வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2024 இன் 44 ஆம் இலக்க அரச நிதி முகாமைத்துவ சட்டத்தினால் 2003 இன் 03 ஆம் இலக்க நிதி முகாமைத்துவம் (பொறுப்புக்கள்) சட்டம் நீக்கப்பட்டிருந்தது.

(ஆ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை	2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளபடியாக அமைச்சு மற்றும் திணைக்களங்களின் 141 கட்டுநிதிக் கணக்குகளில் ரூபா 6,511 மில்லியனான வரவு மீதி தீர்க்கப்படாது காணப்பட்டது. அதில் ரூபா 35 மில்லியன் மீதியானது பல ஆண்டுகளாக நிலவி வருவதுடன், அம் மீதிகளை நிதிப் பிரமாணம் 373 இன் பிரகாரம் தீர்த்துக் கொள்ள 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	***01 வருடத்திற்குக் குறைந்த** உடனடியாக தீர்க்க வேண்டியதாக உரிய நிறுவனத்திற்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. ***1-2 வருடங்களுக்கு இடையே** றவிடுவதற்காக உரிய நிறுவனத்தால் வழக்கு தொடரப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் வழக்கு தீர்ப்பு கிடைக்கும் வரை இந்த பணத்தை அறவிடுவதற்கான இயலுமை காணப்படவில்லை. ***5 வருடங்களுக்க மேல்** இந்த மீதியைத் தீர்ப்பதற்காக தேவையான ஆலோசனைகள் உரிய நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளதுடன் நிறுவனத்துடன் பல தடவைகள் கலந்துரையாடல் நடாத்தப்பட்டிருந்தது.	நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3. முகாமைத்துவ செயற்பாடுகள்

3.1 வெளிநாட்டுக் கடன் மீள்கட்டமைப்பு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ) வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் சீனாவில் ஏற்றுமதி இறக்குமதி வங்கிலிருந்து பெறப்பட்ட 52 கடன் வகைகள் மீளாய்வாண்டின் போது கடன் மீள் கட்டமைப்பு செயற்பாடுகளுக்கு தொடர்புபடுத்தப்பட்டிருந்தது. அதில் அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களில் குறிப்பு இலக்கம் 26(ii) காண்பிக்கப்படுகின்ற 48 செயற்திட்ட கடன்களும் குறிப்பு இலக்கம் 26(iii) இல் காண்பிக்கப்படுகின்ற வெளிநாட்டு காலக் கடன் வசதிகள் 04 உம் உள்ளடங்கியிருந்தது.		
(i) 44 செயற்திட்டங்களுக்குரிய வெளிநாட்டு நாணயத் தொகையில் கணிப்பிடப்பட்டு செலுத்தப்படாத கடன் வட்டி மற்றும் தண்ட வட்டி, 2024 சனவரி 01 இல் உள்ளவாறு காணப்பட்ட கடன் மீதியுடன் சேர்க்கப்பட்டு மீள் கட்டமைக்கப்பட்ட பின்னர் கடன் மீதி கணிப்பிடப்பட்டு கடன் முதிர்ச்சியடைகின்ற காலம் நீடிக்கப்பட்டு கடன் வட்டி விகிதம் குறைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 33 செயற்திட்டங்களுக்குரிய கடன் மீதி அ.டொலர் 236 மில்லியனாலும், 11 செயற்திட்டங்களுக்குரிய கடன் மீதி ரென்மின்பீ (யுவான்) 275 மில்லியனாலும் அதிகரித்திருந்தது.	இந்த வேறுபாடுகள் உரிய ஒவ்வொரு கடன் மீள்கட்டமைப்பதற்கு முன்னர் மற்றும் அதன் பின்னர் ஏற்பட்ட வேறுபாடுகள் ஆகும். அதன் பிரகாரம் கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றோம்.	தகவல்கள் சமர்ப்பித்தல் வேண்டும்.
(ii) வெளிநாட்டு அந்நியச் செலாவணி கால ரீதியான கடன் வசதிகள் 04 இற்குரிய அந்நியச் செலாவணியில் கணிப்பிடப்பட்டு செலுத்தப்படாத கடன் வட்டி மற்றும் தண்ட வட்டி 2024 சனவரி	மேற்படி	தகவல்கள் சமர்ப்பித்தல் வேண்டும்.

	01 இல் உள்ளவாறு கடன் மீதியுடன் சேர்க்கப்பட்டு மீள் கட்டமைக்கப்பட்ட பின்னர் கடன் மீதி கணிப்பிட்டு முதிர்ச்சியடைந்த காலம் நீடிக்கப்பட்டு கடன் வட்டி விகிதம் குறைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 03 கடன் வசதிகளுக்குரிய கடன் மீதி அ.டொலர் 258 மில்லியனாலும், ஒரு கடன் வசதிக்குரிய கடன் மீதி ரென்மின்பீ (யுவான்) 180 மில்லியனாலும், அதிகரித்திருந்தது.		
(iii)	2024 சனவரி 01 இல் உள்ளவாறு காணப்பட்ட யூரோ 4.5 மில்லியன் கடன் மீதிக்கு நிலுவையாக இருந்த கடன் வட்டி மற்றும் தண்ட வட்டியாக யூரே 573,924 சேர்க்கப்பட்டு அதில் யூரோ 2.4 மில்லியன அதாவது 48 சதவீதம் கடன் உரிமையாளரால் கைவிடப்பட்டதன் பின்னர் (Hair cut) மிகுதி யூரோ 2.6 மில்லியன் மீதி 2024 ஆம் ஆண்டின் போது செலுத்தி பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.	கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றோம்.	தகவல்கள் சமர்ப்பித்தல் வேண்டும்.
(iv)	03 செயற்திட்டங்களுக்குரிய ரென்மின்பீ (யுவான்) 40 மில்லியன் கடன் மீதி எந்தவொரு மீள் கட்டமைத்தலும் இன்றி 2024 ஆம் ஆண்டில் செலுத்தி பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.	கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றோம்.	தகவல்கள் சமர்ப்பித்தல் வேண்டும்.
(ஆ)	வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களில் குறிப்பு இலக்கம் 26(iv) இல் காண்பிக்கப்பட்ட 2024 சனவரி 01 இல் உள்ளவாறு காணப்பட்ட அமெரிக்க டொலர் 12,550 மில்லியன் வெளிநாட்டு பிணைமுறி கடன் 11 இல் 2024 ஆம் ஆண்டின் போது மீள் கட்டமைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அந்த 11 பிணைமுறிகளில் முதிர்ச்சியடைந்த காலம் நீடிக்கப்பட்டு கடன் உரிமையாளரால் பேரளவு கடன் கைவிடல் (Nominal Hair cut) மேற்கொள்ளப்பட்டதுடன் அகக் குறைந்த சராசரி வட்டி விகிதம்	நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் விநியோகிக்கப்பட்ட 2024.12.18 ஆந் திகதிய ஊடக அறிவித்தல் மூலம் இந்த தகவல்கள் பெற்றுக்கொள்ள முடியும்.	தகவல்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

தீர்மானிக்கப்பட்டு புதிய சர்வதேச பிணைமுறிகள் 08 இற்கு மாற்றப்பட்டிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும் இந்தப் பிணைமுறிகளுக்குரிய 2023 திசம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவைக் கடன் வட்டி அமெரிக்க டொலர் 3,750 மில்லியன் ஆக இருந்ததுடன் மீள் கட்டமைக்கப்பட்ட பின்னர் புதிய சர்வதேச பிணைமுறிகள் 08 இன் பெறுமதி அமெரிக்க டொலர் 10,647 மில்லியன் ஆக காணப்பட்டது.		

3.2 உள்நாட்டுக் கடன் மீள்கட்டமைப்பு

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ) 2024 சனவரி 01 இல் உள்ளவாறு காணப்பட்ட அமெரிக்க டொலர் 240 மில்லியன் அதாவது ரூபா 77,742 மில்லியன் தொகை இலங்கை வங்கியிலிருந்து பெறப்பட்ட வெளிநாட்டு அந்நியச் செலாவணி வெளிநாட்டு நாணயம் வங்கி அலகு (செயற்திட்டம் அல்லாத) கடன் தொகை நிலுவை வட்டி ரூபா 6,601 மில்லியன் உடன் இலங்கை ரூபாய்களில் உடைய திறைசேரி பிணை முறிகளுக்கு மாற்றப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2024 திசம்பர் 31 இல் உள்ளவாறு அந்நியச் செலாவணி வங்கி அலகு (செயற்திட்டம் அல்லாத) கடன் பெறுமதி பூச்சியமாக இருந்ததுடன் அந்தக் கடன் மீள் கட்டமைக்கப்பட்ட பின்னர் இலங்கை வங்கிக்கு செலுத்த வேண்டிய திறைசேரி பிணைமுறிகளின் பெறுமதி ரூபா 82,551 மில்லியன் ஆக காணப்பட்டது.	கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றோம்.	தகவல்கள் சமர்ப்பித்தல் வேண்டும்.
(ஆ) பெற்றறோலிய கூட்டுத்தாபனத்தால் இரண்டு அரச வங்களில் இருந்து பெறப்பட்டிருந்த 2022 ஆம் ஆண்டின் போது பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு கையேற்கப்பட்டிருந்த கடன் தொகைக்குரிய 2024 சனவரி 01 இல் உள்ளவாறு காணப்பட்ட அமெரிக்க டொலர் 2,435 மில்லியன் அதாவது	கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றோம்.	தகவல்கள் சமர்ப்பித்தல் வேண்டும்.

	ரூபா 788,682 மில்லியன் மீதி பின்வருமாறு மீள்கட்டமைக்கப்பட்டிருந்தது.		
(i)	இலங்கை வங்கிக்கு செலுத்த வேண்டிய கடன் பெறுமதியான ரூபா 410,430 மில்லியன் மற்றும் அதற்குரிய நிலுவை வட்டியான ரூபா 73,603 மில்லியன் தொகையும் உள்ளடக்கி அமெரிக்க டொலர்களை உடைய கால கடன் வசதியாக மாற்றப்பட்டிருந்தது.	கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றோம்.	தகவல்கள் சமர்ப்பித்தல் வேண்டும்.
(ii)	மக்கள் வங்கிக்கு செலுத்த வேண்டிய பெறுதியின் ஒரு பங்கான ரூபா 136,698 மில்லியன் மற்றும் அதற்குரிய நிலுவை வட்டியான ரூபா 30,464 மில்லியன் உம் உள்ளடக்கி அமெரிக்க டொலர்களை உடைய காலக் கடன் வசதியாக மாற்றப்பட்டிருந்ததுடன் மிகுதிப் பங்கான ரூபா 224,358 மில்லியன் மற்றும் அதற்குரிய நிலுவை வட்டியான ரூபா 38,225 மில்லியன் தொகையும் உள்ளடக்கி இலங்கை ரூபாயில் உள்ள திறைசேரிப் பிணைமுறிக்கு மாற்றப்பட்டிருந்தது.	கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றோம்.	தகவல்கள் சமர்ப்பித்தல் வேண்டும்.
(iii)	அந்த கடன் மீள்கட்டமைப்பின் பின்னர் 2024 திசம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கை வங்கிக்கு செலுத்த வேண்டிய காலக் கடன் பெறுமதி அமெரிக்க டொலர் 1,582 மில்லியன் அதாவது ரூபா 462,783 மில்லியன் உம், மக்கள் வங்கிக்கு செலுத்த வேண்டிய காலக் கடன் பெறுமதி அமெரிக்க டொலர் 546 மில்லியன் அதாவது ரூபா 159,823 மில்லியன் உம் மக்கள் வங்கிக்கு செலுத்த வேண்டிய திறைசேரி பிணைமுறிகளின் பெறுமதி ரூபா 262,583 மில்லியன் உம் காணப்பட்டது.	கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றோம்.	தகவல்கள் சமர்ப்பித்தல் வேண்டும்.

3.3 நாட்டில் நடைபெற்ற கலவர நிலைமையின் காரணமாக பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதனங்களுக்கு ஏற்பட்ட இழப்புக்கள் தொடர்பாக நிதி ரீதியான இழப்புக்களை மீளளிப்புச் செய்தல்.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	வருடாந்த மதிப்பீட்டின் மூலம் எந்த ஒரு நிதியேற்பாடும் ஒதுக்கப்படாமல்	ஆண்டின் போது ஏதாவது ஒரு பாதீட்டு மதிப்பீடு	காணப்படுகின்ற நிலைமை தொடர்பாக

	2022 மார்ச் 31 ஆம் திகதி முதல் 2022 யூலை 22 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் நாட்டில் நடைபெற்ற கலவர நிலைமையின் காரணமாக பாராளுமன்ற உறுப்பினர்களின் தனிப்பட்ட அசையும் ஆதனங்களுக்கு ஏற்பட்ட இழப்புக்கள் தொடர்பாக குறைநிரப்பு உதவி சேவை மற்றும் அவசர சந்தர்ப்பம் பொறுப்பு செயற்திட்டத்தின் மூலம் செலவினம் அரச நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்கு கிடைத்த குரைநிரப்பு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டு நிதியேற்பாட்டை பயன்படுத்தி 2023 ஆம் ஆண்டின் போது 41 பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக ரூபா 1,050 மில்லியன் மற்றும் மீளாய்வாண்டின் போது 32 பாராளுமன்ற உறுப்பினர்களின் அசையும் ஆதனங்களுக்கு ஏற்பட்ட இழப்பிற்காக ரூபா 178 மில்லியனும் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 1,228 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.	தயாரிக்கப்படுகின்ற சந்தர்ப்பங்கள் இவ்வாறான இழப்பீட்டிற்காக முழுமையான இழப்பீடு மதிப்பீடு செய்யும் இயலுமை காணப்படுமாயின் மற்றும் அந்த இழப்பீட்டை இழப்பீட்டை எதிர்வரும் ஆண்டிற்கு காலம் தாழ்த்துவற்கு முடியுமாகக் காணப்படுமாயின் அதற்காக தேவையான ஏற்பாடுகள் எதிர்வரும் ஆண்டின் வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் உள்ளடக்கவதற்கு நடவடிக்கை எடுக்க முடியும்.	விசாரணைகளை மேற்கொண்டு காணப்படக் கூடிய நிலைமை தொடர்பாக பொருத்தாமான மதிப்பீட்டை மேற்கொண்டு வருடாந்த மதிப்பீட்டின் மூலம் நிதியேற்பாட்டை ஒதுக்கிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	அவ்வாறே கட்டுநிதி கிடைத்து செலுத்துவதற்குத் தயார் நிலையில் இருந்த போதிலும் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நிதி கிடைக்காத 09 பாராளுமன்ற உறுப்பினர்களின் ரூபா 39 மில்லியனாகக் காணப்படுகின்றமை மேலும் அவதானிக்கப்பட்டது.	மேற்படி	மேற்படி

3.4 பொது முயற்சிகளை மீள்கட்டமைத்தல்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	பொது முயற்சிகளை மீள் கட்டமைப்பதற்குரிய முன்னாள் நிதி பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கை அமைச்சின் கீழ் பொது முயற்சிகளை மீள்கட்டமைக்கும் அலகு ஒன்று 2022 திசெம்பர் 01 ஆந் திகதி முதல் அமுல்படுத்தப்பட்டிருந்தது. 2023 மே மாதம் 15 ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கிய	பிடிப்புக் கம்பனியும் ஸ்தாபிக்க முடியுமாயின் பொது முயற்சிகள் முகாமைத்துவம் தொடர்பாக புதிய சட்டத்தை அறிமுகப்படுத்திய பின்னர் அந்த சட்டத்தில் உள்ளடக்க வேண்டியிருந்த ஏற்பாடுகளின் பிரகாரம் ஆகும். எனினும் அதற்கு முன்னர் அரசில்	அரசுக்கு சொந்தமான பொது முயற்சிகளை மறுசீரமைக்கும் கொள்கையில் குறிப்பிடப்பட்ட முறையில் நடவடிக்கை எடுக்கப்பதற்கு அல்லது அதற்கு பொருத்தமான

	தீர்மானத்தின் பிரகாரம் நிரற்படுத்தப்பட்ட 72 நிறுவனங்கள் இணைந்த கம்பனியாக மீள்கட்டமைப்பதற்காக பிடிப்புக் கம்பனி (HOCO) 2025 மே 30 ஆந் திகதி வரையிலும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. எனினும் அந்த பிடிப்பு கம்பனிக்கு கையளிக்கப்பட்டு மீள் கட்டமைப்பதற்கு முன்மொழியப்பட்டிருந்த 08 நிறுவனங்கள் பிடிப்புக் கம்பனிக்கு கையளிக்கப்படாமல் மீள் கட்டமைப்பின் கீழ் அகற்றும் (Divesting) செயற்பாடுகளுக்காக கொடுக்கல் வாங்கல் ஆலோசனையாளர் தெரிவு செய்யப்பட்டிருந்தார். எனினும் நட்டம் பெறுகின்ற செயற்திறனற்ற நிறுவனங்களை செயற்திறனாக மற்றும் வினைத்திறனாக நடாத்திச் செல்வது அதன் ஆரம்ப நோக்கமாக இருந்த போதிலும் தெரிவு செய்யப்பட்ட 08 நிறுவனங்களில் 04 நிறுவனங்கள் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளின் போது வரிக்கு முன் இலாபம் உழைத்திருந்த நிறுவனமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.	காணப்பட்ட காலத்தில் அந்த சட்டத்தை அங்கீகரித்துக் கொள்வதற்கான சந்தர்ப்பம் கிடைக்காமையினால் பிடிப்பு கம்பனி ஸ்தாபித்தலை மேற்கொள்ள முடியாது இருந்தது.	முறையில் நடவடிக்கை எடுப்பதற்கோ அல்லது அதற்கு பொருத்தமான திருத்தங்களை முறையாக மேற்கொள்வதற்கோ மற்றும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	அவ்வாறே தெரிவு செய்யப்பட்ட 08 நிறுவனங்களில் 07 நிறுவனங்களுக்காக 2023 ஆம் ஆண்டின் போது கொடுக்கல் வாங்கல் ஆலோசனையாளரை நியமிப்பதற்காக அமைச்சரின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன் கொடுக்கல் வாங்கல் ஆலோசனையாளராக உடன்படிக்கை செய்த வெளிநாட்டு நிறுவனங்கள் இரண்டிற்காக மீளாய்வாண்டின் போது நிதி அமைச்சின் இலக்கம் 18/62P பொது வைப்புக் கணக்கின் மூலம் ரூபா 193 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. மேலும் பொது முயற்சிகளை மீள்கட்டமைக்கும் பிரிவை நடாத்திச் செல்வதற்காக 2023 மற்றும் 2024 என்ற இரண்டு ஆண்டுகளுக்காக ரூபா 121 மில்லியன் செலவிடப்பட்டதுடன் அதில் ரூபா 58 மில்லியன் அந்த அலகின் சம்பளம் செலுத்துவதற்காக செலவிடப்பட்டிருந்தது. 2025 ஆம்	அரசாங்கத்திற்குச் சொந்தமான பொது முயற்சிகளை மறுசீரமைக்கும் பிரிவு ஆரம்ப ரீதியில் இனங்கண்ட 08 நிறுவனங்களின் மீள் கட்டமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டி இருந்ததுடன் அதில் அநேகமானவை 2024 ஆகஸ்ட் மாதம் வரையில் இறுதிக் கட்டத்தில் காணப்பட்டது. எனினும் புதிய அரசாங்கம் இந்த செயற்திட்டம் தொடர்பான மீண்டும் கவனத்தில் கொண்டிருந்ததுடன் முன்னைய செயற்திட்டங்களுக்கு இடையே கிரேன்ட் ஹயட் ஹொட்டல் மறுசீரமைத்தல்	அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் விபரிக்கப்பட்டுள்ள பிரகாரம் செயற்திறனற்ற நிறுவனங்களை செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் நடாத்திச் செல்வது தொடர்பில் ஆரம்ப நோக்கமாக இருந்ததாக குறிப்பிடப்பட்டமையால் மீள் கட்டமைப்பின் போது அந்த விடயங்களைக் கவனத்தில் கொள்ள வேண்டியதுடன் அவ்வாறு இல்லையாயின் மீள் கட்டமைக்கும் நடவடிக்கைகளுக்கு தாக்கமளிதுள்ள

ஆண்டின் போது பொது முயற்சிகளை மீள்கட்டமைக்கும் அலகின் நடவடிக்கைகள் தற்காலிகமாக கைவிடப்பட்டதாக அறிவிக்கப்பட்டதுடன் செலவிடப்பட்ட தொகை பயனற்ற செலவினத்திற்கு உட்படக் கூடியதாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.	மேலும் முன்கொண்டு செல்வதற்கு தற்போது அனுமதி கிடைத்துள்ளது. காணப்பட்ட அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கையின் பிரகாரம் மீள் கட்டமைப்பதற்காக 08 நிறுவனங்கள் இனங்காணப்பட்டதுடன் இலாபம் பெறுதல் அல்லது பெறாமை மீள்கட்டமைக்க வேண்டிய தீர்மானம் எடுப்பதற்காக தாக்கமளித்த விடயங்கள் காணப்படாது இருந்ததை அறியத் தருகின்றோம்.	ஏனைய விடயங்களை வெளிப்படுத்துதல் வேண்டும்.

3.5 வெளிநாட்டுக் கடன் பெற்றுக்கொள்ளும் போது இறையாண்மை உரித்தைக் கைவிடல்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கை அரசாங்கத்திற்குச் சொந்தமான 755 செயற்திட்டக் கடன்களின் 549 செயற்திட்டக் கடன்களுக்கு உரியதாக வெளிநாட்டு வளங்கள் திணைக்கத்தில் இருந்து தகவல்கள் பெறப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் 78 வெளிநாட்டு செயற்திட்டக் கடன்களுக்கு உரிய கடன் உடன்படிக்கைகளின் இறையாண்மை உரித்து பல்வேறு வகையில் கைவிடல் (Waiver of Sovereign Immunity) பந்தியில் உள்ளடக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.	இந்த கடன் உடன்படிக்கைகள் கைச்சாத்து இடுவதற்கு முன்னர் மத்திய வங்கி நாணய சபை, அமைச்சரவை மற்றும் சட்டமாதிபர் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. மேலும் அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் சீன நிதி நிறுவனங்களுடன் கடன் மீள் கட்டமைப்பு கலந்துரையாடி பூர்த்தி செய்யப்படாது இருந்தமையால் இலங்கை அரசாங்கம் முகங்கொடுக்கின்ற ஆபத்துக்கள் தொடர்பாக இந்த சந்தர்ப்பத்தின் போது தீர்மானிக்க முடியாது இருந்தது. இலங்கை அரசாங்கத்தால் இருதரப்பினர் கடன் மீள் கட்டமைப்பு செயற்பாடுகளின் போது தமது நிதி மற்றும் சட்ட ஆலோசனையாக Clifford Chance LLP සහ Lazard Inc. என்ற சர்வதேச ஆலோசனையாளர்கள் நியமிக்கப்பட்டதுடன் அந்த ஆலோசனையாளர்களிடம் இருந்து உரிய ஆலோசனையின் பிரகாரம் உரிய கடன் உடன்படிக்கைகளில் குறிப்பிப்பட்ட சுயாதீன தன்மையை கைவிடும் பிரிவுகளுக்கும் இணங்க சீன அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் சீன நிதி நிறுவனங்களுடன் தொடர்ந்தும்	எதிர்காலத்தின் போது வெளிநாட்டுக் கடன் பெற்றுக் கொள்ளும் போது உரிய கடன் உடன்படிக்கைகளில் உள்ளடக்கியுள்ள சுயாதீன தன்மையின் உரித்தை கைவிடல் தொடர்பான பந்தி தொடர்பாக விசேட கவனம் செலுத்துதல் வேண்டும்.

	கடன் மீள் கட்டமைப்பு கலந்துரையாடல்களை நடாத்திச் செல்கின்றது.	

3.6 ஏனைய அவதானிப்புக்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	தலைப்பு 04 இன் கீழ் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட 10 முற்பணக் கணக்குகளின் கூட்டுமொத்தம் ரூபா 1,344 மில்லியன் ஆன மீதி உரிய பிரகாரம் தீர்த்து வைப்பதற்கோ அல்லது நிதிப்பிரமானம் 518 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் பல வருட காலமாக தொடர்ச்சியாக பேணிச் செல்லப்பட்டிருந்தது.	அரசாங்கத்தின் அமைச்சுக்கள் திணைக்களங்களுக்கு அரசாங்கம் வழங்குகின்ற முற்பணம் தொடர்பான அந்த கணக்குகள் பேணிச் செல்கின்ற நிறுவனத்திற்கு உரியதாகும். எனினும் அது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது என தயவுடன் அறியத் தருகின்றோம்.	நீண்டகாலமாகக் தீர்த்து வைக்கப்படாமல் காணப்படுகின்ற முற்பணக் கணக்கு மீதிகளை தீர்த்து வைப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணத்தின் கீழ் மாகாண சபைகளுக்கு இடமாற்றம் சென்ற அரசாங்கத்தின் உத்தியோகத்தர்களின் முற்பணமாக வழங்கப்பட்ட ரூபா 191 மில்லியன் நிதிக் கூற்றுக்களில் தொடர்ச்சியாக காணப்பட்ட போதும் அப் பெறுமதி தீர்த்து வைப்பதற்கு மீளாய்வாண்டின் போது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இந்த தகவல்களை பரீட்சித்து சரியாக இனங்கண்ட பின் மாகாண சபைகளுக்கு ஆலோசனை வழங்கி மீதிகளை தீர்த்து வைப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படும்.	மேற்படி
(இ)	தலைப்பு 03 இன் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களின் 03 முற்பணக் கணக்குகளின் கூட்டுமொத்தம் ரூபா 9 மில்லியன் ஆன மீதி மற்றும் தலைப்பு 02 இன் கீழ் கூட்டுமொத்தமாக ரூபா 408,233 ஆன மறை மீதி ஒன்று தீர்த்து வைக்கப்படாமல் பல வருடகாலமாக தொடர்ச்சியாக பேணிச் செல்லப்பட்டிருந்தது.	இந்த கடன் மீதி பல்வேறு சந்தர்ப்பங்களின் போது அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் மூடப்பட்டமை மற்றும் கையளித்தல் அடிப்படையில் உருவாகி இருந்ததுடன் இந்த மீதிகள் மிகவும் பழைய மீதியாக இருந்ததுடன் திணைக்களத்திற்கு உரியதாகக் காணப்படுகின்ற தகவல் பகுப்பாய்வுகளை மேற்கொண்டு செயலிழந்து	நீண்டகாலமாகக் தீர்த்து வைக்கப்படாமல் காணப்படுகின்ற முற்பணக் கணக்கு மீதிகளை தீர்த்து வைப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

		காணப்பட்டமைக்கான காரணங்களை சரியாக இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	
(ஈ)	அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டியதாகக் காணப்பட்ட உபகடன் மீதி ரூபா 195,004 மில்லியன் ஆகும். கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட காலப் பகுப்பாய்வின் பிரகாரம் உரிய நிறுவனம் உபகடன் உடன்படிக்கையின் பிரகாரம் செலுத்தாமையின் காரணமாக 03 நிறுவனங்களுக்கு உரிய 05 வருடங்களை மேற்பட்ட ரூபா 1,304 மில்லியன் நிலுவை உபகடன் தவணை மீதி அறவிட வேண்டிக் காணப்பட்டது.	கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றோம்.	உபகடன் உடன்படிக்கையின் பிரகாரம் உபகடன் தவணைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(உ)	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உபகடனுக்காக கிடைக்க வேண்டிய வட்டிப் பெறுமதியின் கூட்டுத்தொகை ரூபா 10,733 மில்லியன் ஆக இருந்ததுடன் உடன்படிக்கையின் பிரகாரம் 03 நிறுவனங்களுக்கு உரிய 05 வருடங்களுக்கு மேற்பட்ட செலுத்தப்படாத வட்டியின் கூட்டுமொத்தம் ரூபா 912 மில்லியன் ஆக இருந்தது.	கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றோம்.	அரசாங்கத்தின் உபகடன் வழங்குதல் மற்றும் உபகடன் சேவைகளுக்கு உரியதாக அறவிட வேண்டிய வட்டி வருமானத்தை தாமதம் இன்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஊ)	திறைசேரி செயற்பாட்டு நவடிக்கைகளை தானியங்கச் செய்வதற்காக இணைந்த திறைசேரி முகாமைத்துவ தகவல் முறைமை (ITMIS) அறிமுகப்படுத்துதல் 2010 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டதுடன் அதற்காக ஒட்டு மொத்த முதலீட்டின் மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 7,920 மில்லியனுக்கு சமமான அ.டொலர் 60 மில்லியன் ஆக காணப்பட்டது. இதற்காக 2023 திசம்பர் 31 ஆம் திகதி வரையில் கூட்டுமொத்தமாக ரூபா 5,647 மில்லியன் செலவிடப்பட் டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவ	முறைமையில் court case management செயற்பாடுகள் அமைச்சின் சட்ட நடவடிக்கை சட்ட அலுவல்கள் திணைக்களத் திற்காக மாத்திரம் அபிவிருத்தி செய்யப்பட்டதுடன் முறைமையின் அரச நிதி முகாமைத்துவத் திற்குரிய பிரதான மூலங்களுக்கு உரித்தல்லாத வரையறுக்கப்பட்ட செயற்பாடாகும். இந்த செயற்பாடுகள் மேற் கூறப்பட்ட திணைக்களத்தின் மூலம் பயன்பாட்டை	தற்போதும் பின்னடைவில் காணப்பட்டமையால் முறைமையை விரைவாக முழுமையாக அபிவிருத்தி செய்து அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

திணைக்களம் மற்றும் நிதி திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செலவினத் தலைப்பின் கீழ் ரூபா 957 மில்லியன் செலவினமும் செய்யப் பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2024 திசம்பர் 31 ஆம் திகதி வரையில் கூட்டுமொத்தமாக ரூபா 6,605 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அண்ணளவாக 14 வருடங்கள் கடந்திருந்த போதும் இந்த செயற் திட்டத்தின் மூலம் அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட ஆரம்ப பிரதான செயற்பாடுகள் 13 துறைகளில் முழுமையாக அபிவிருத்தி செய்து அமுல்படும் நிலைக்கு கொண்டுவரப்பட்டிருக்க வில்லை.

ஆரம்பித்த போதிலும் அந்த செயற்பாடுகளில் உள்ள குறைந்த முக்கியத்துவத்தின் காரணமாக தற்போது தொடர்ச்சியாக அமுல்படுத் தப்படவில்லை. ITMIS போன்ற கணிசமான பரப்பளவையுடைய செயற்பாடுகள் ஒரே தடவையில் அரசாங்க நிறுவனம் யாவற்றிலும் ஸ்தாபித்தல் நடைமுறையில் மேற்கொள்ள முடியாதிருந்தது. அதன் பிரகாரம் முறைமையில் வரவு செலவுத் திட்டத்தை அமுல்படுத்துவதற்கு உரிய செயற்பாடுகளில் ஆரம்பமாக பரவலாக்கப்பட்டு 2020 ஆம் ஆண்டு வரையில் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் முறைமையின் செலவினத்தை முகாமைத்து வம் செய்வதற்குரிய செயற்பாடுகளில் பரவலாக்கல் இரண்டாவதாக ஆரம்பிக்கப் பட்டிருந்தது. எனினும் கொவிட் (Covid) தொற்று நோய் நிலைமை, சமூக மற்றும் நிதி நெருக்கடியின் காரணமாக காணப்பட்ட நிச்சயமற்ற தன்மை, மின்சாரம் மற்றும் போக்குவரத்து சேவை வீழ்ச்சியடைந்தமையினால் முறைமையின் பரவலாக்கல் நடவடிக்கைகளுக்காக கணிசமான இடையூறுகள் ஏற்பட்டிருந்தமை, நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்ட பயனர்களின் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மேற்கூறப்பட்ட விடயங்களினால் அமுல்படுத்த முடியாதிருந்தது. மேலும் முறைமை தொடர்பாக உள்ளக ரீதியிலும் வெளியக ரீதியிலும் விஷேட நிபுணர்கள்/ குழுவினால் மேற்கொள்ளப்பட்ட

		ஆய்வுகளின் காரணமாக முறைமையின் செயற்பாடுகள் மற்றும் பராமரிப்பு சேவை உடன்படிக்கைகள் நாளது வரையாக்குவதில் தாமதமடைவதற்கு ஏற்பட்டிருந்தமையினால் முறைமையின் பரவலாக்களை பூர்த்தி செய்வதற்கு தேவையான மேலதிக பயனர் அனுமதிப் பத்திரங்களை பெற்றுக்கொள்ளல் 2025 ஆம் ஆண்டின் பெப்ரவரி மாதம் வரை தாமதம் அடைந்திருந்தது.	
(எ)	மேலும் இந்த ITMIS முறைமை ஆரம்பத்திலிருந்து அதில் அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட, சம்பள முகாமைத்துவ செயற்பாடுகள் பிரிவை ஸ்தாபித்து அமுல்படுத்தாமல் 2016 ஆம் ஆண்டின் போது e-Payroll என்ற பெயருடைய இன்னுமொரு சம்பளம் முகாமைத்துவம் முறைமை ஒன்று நிதியமைச்சிக்கு மாத்திரம் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் அதற்காக 2024 திசம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 6.7 மில்லியன் செலவினமும் மேற்கொள்ளப்பட்டிருந்தது.	2016 ஆம் ஆண்டு வரையிலும் தற்போதும் சம்பள முகாமைத்துவத்திற்காக அரச துறைகளில் பயன்படுத்தப்படுகின்ற காலாவதியான மென்பொருளுக்கு பதிலாக புதிய மென்பொருள் ஒன்றை மொத்த அரச துறைகளுக்காகவும் அமுல்படுத்துவதற்கான தேவை நிதி அமைச்சினால் இனங்காணப்பட்டிருந்தது. ITMIS முறைமையில் அபிவிருத்தி செய்யப்பட்ட சம்பள முகாமைத்துவ செயற்பாடுகள் முழுமையாக அரச துறைகளுக்காகவும் பரவலாக்குவதற்கு தொழில்நுட்ப ரீதியில் பொருத்தமான செயற் பாடுகள் காணப்படவில்லை. மேலும் மேலதிக பயநர் அனுமதிப் பத்திரங்களுக்காக கணிசமான தொகையொன்றை செலவிட வேண்டி ஏற்பட்டிருந்தமையினால் அவ்வாறு செய்தல் பொருளாதார ரீதியிலும் பாதகமானதாக இருந்தது. அதன் பிரகாரம் 2016 ஏப்ரல் மாதம் நடைபெற்ற	பொருளாதார ரீதியிலும், செயற்திறன் தொடர்பாகவும் விஷேட கவனம் செலுத்தி மொத்த அரசாங்கத் துறைகளுக்காகவும் சம்பளம் முகாமைத்துவம் முறைமையொன்றை அமுல்படுத்துவதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

		அமைச்சின் கொள்கை ரீதியான கொள்கைக் கூட்டத்தின் போது முழு அரசாங்கத் துறைகளுக்காகவும் சம்பள முகாமைத்துவத்திற்கு பொருத்தமான இன்னுமொரு மென்பொருளை அபிவிருத்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டதுடன் அதன் பிரகாரம் ITMIS முறைமையில் வரையறுக் கப்பட்ட சம்பள முகாமைத்துவ செயற்பாடு களை மேலும் அபிவிருத்தி செய்யப்பட் டிருக்கவில்லை. மேற்கூறப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட e-Payroll சம்பள முகாமைத்துவ முறைமை தற்போது நிதி அமைச்சிலும், திறைசேரிகள் திணைக்களத்தி லும் பரிசோதனை ஓட்டமாக அமுல்படுத்தப்படுகின்றது. இதன் வெற்றிகரமான தன்மையின் அடிப்படையில் மிகுதி நடவடிக்கைகளை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.	
(ஏ)	2024 திசம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணம் (8493) காலப் பகுப்பாய்வின் பிரகாரம் அரசாங்கத்தின் அமைச்சுக்கள்/ திணைக்களங்களுக்கு இடமாற்றலாகிச் சென்ற உத்தியோகத்தர்கள், உள்ளக இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்கள், மாகாண சபையின் நிறுவனங்களுக்கு இடமாற்றலாகிச் சென்ற உத்தியோகத்தர்கள், மரணமடைந்த உத்தியோகத்தர்கள், ஓய்வு பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்கள், வேலை நீக்கம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள், சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்கள்,	ஒவ்வொரு வருடத்தின் இறுதியிலும் அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணம் பீ கணக்கு அரச கணக்குகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அறவிடுவதற்குள்ள சகல மீதிகளும் பகுப்பாய்வு செய்யப்படுவதுடன் தாபன விதிக்கோவை, நிதிப்பிரமாணம் மற்றும் காணப்படுகின்ற சுற்றறிக்கை ஏற்பாடுகளைப் பின்பற்றி தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்து உரிய நிறுவனங்களுக்கு அறிவிக்கப்படுகின்றது. காலாண்டு ரீதியில் அந்த	அறவிட வேண்டிய முற்பண மீதிகளை தீர்த்து வைப்பதற்காக விரைவாக நடவடிக்கை எடுத்து முறைமையை அபிவிருத்தி செய்தல் வேண்டும்.

இரண்டாம் அடிப்படை யில் இடமாற்றம் மற்றும் உள்ளக இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத் தர்கள், வெளிநாடு சென்ற / உள்நாட்டு விடுமுறை பெற்ற உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய வகைகளின் கீழ் ஆன உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய 05 இற்கும் 10 வருடங்களுக்கும் இடையிலான மீதி ரூபா 108 மில்லியனாக இருந்ததுடன் 10 வருடங்களுக்கு மேற்பட்ட மீதி ரூபா 232 மில்லியன் ஆக காணப்பட்டது.	நிறுவனங்களின் செயல் முன்னேற்றம் எங்களால் பெற்றுக் கொள்ளப்படுவதுடன் கடன் மீதிகளின் அறவீடுகளின் செயல் முன்னேற்றத்தைப் பரீட்சித்து தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்கி தொடர்ச்சியாக பின்தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்ப டுகின்றது.

4. செயலாற்றல்

4.1 வருமானத்தை மதிப்பீடு செய்தல்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2024 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி ரூபா 29,898 பில்லியன் ஆக இருந்ததுடன் 2023 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி ரூபா 27,419 பில்லியன் ஆகும். அதன் பிரகாரம் கடந்த ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது மொத்த உள்நாட்டு உற்பத்த ரூபா 2,479 பில்லியனால் அதாவது 09 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.	ஏற்றுக்கொள்கின்றோம்.	தகவல்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
(ஆ)	2024 ஆம் ஆண்டிற்காக பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த வரவு செலவுத் திட்டத்தின் ஆரம்ப மதிப்பீட்டின் பிரகாரம் அரசாங்கத்தின் வருமானம் ரூபா 4,144 பில்லியன் ஆக இருந்ததுடன் கடந்த ஆண்டின் போது அது ரூபா 3,408 பில்லியன் ஆக இருந்தது. அதன் பிரகாரம் கடந்த ஆண்டை விட அரசாங்கத்தின் வருமானம் ரூபா 736 பில்லியனால் அதாவது சதவீதமாக 22 சதவீதத்தால் அதிகரித்து அரசாங்கத்தின் வருமான மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.	ஏற்றுக்கொள்கின்றோம்.	மேற்படி

(இ)	2024 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கிய பாதீட்டு செயலாற்றல் மற்றும் பற்றாக்குறை நிதியீட்டக் கூற்றின் பிரகாரம் ரூபா 4,061 பில்லியன் ஆக இருந்ததுடன் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட வருடாந்த வருமான மதிப்பீடு ஒப்பீடு செய்யும் போது ரூபா 83 பில்லியன் ஆல் குறைவடைந்திருந்தது. அது 2023 ஆம் ஆண்டின் உள்ளபடியான வருமானத்துடன் ஒப்பீடு செய்யும் போது 32 சதவீதம் அதிகரித்திருந்த போதும் மீளாய்வாண்டின் வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை குறைவடைந்தமை 17 சதவீதம் மாத்திரம் ஆகும்.	அரசாங்கத்தின் வருமான முரண்களைப் போன்று அரசாங்க செலவினங்களில் ஏற்படுகின்ற முரண்களையும் மீளமைத்து பாதீட்டு நிலுவை/ மிகையும் குறைவு/ அதிகரிப்பு தொடர்பில் தாக்கம் ஏற்படுகின்றது.	மேற்படி

4.2 வருமான பற்றாக்குறை

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டிற்காக கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் பாதீட்டு செயலாற்றல் மற்றும் பற்றாக்குறை நிதியீட்டக் கூற்றின் பிரகாரம் வருமானத்தின் பற்றாக்குறை ரூபா 1,309 பில்லியன் ஆக இருந்ததுடன் கடந்த ஆண்டின் போது காணப்பட்ட ரூபா 1,650 பில்லியனுடன் ஒப்பீடு செய்யும் போது குறைவடைந்திருந்தது. 2006 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் உயர்ந்த வருமானத்தின் பற்றாக்குறை 2023 ஆம் ஆண்டின் போது அறிக்கையிடப்பட்டிருந்தது. அந்த காலப் பகுதியில் ஒவ்வொரு வருடமும் சேகரிக்கப்பட்ட வருமானம் அரசாங்கத்தின் மீண்டெழும் செலவினத்தைத் தீர்ப்பதற்கு தவறியிருந்தது. வருமானத்தின் பற்றாக்குறை குறைக்கும் பெறுமதி 2007 ஆம் ஆண்டின் போது அறிக்கையிடப்பட்டதுடன் அது ரூபா 43 பில்லியன் ஆக இருந்ததுடன் சேகரிக்கப்பட்ட அரசாங்கத்தின் வருமானத்தில் 7.52 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியது. அந்தக்	குறிப்பிட்டுக் கொள்கின்றோம்.	வருமான பற்றாக்குறையைக் குறைத்துக் கொள்வதற்காக வருமானத்தை சேகரித்து மேலும் செயற்திறனாகவும் மற்றும் செலவினங்களை மேலும் வகைப்படுத்தக் கூடிய முறையில் இனங்காண்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

காலப் பகுதியில் ஒட்டுமொத்த வருமானத்தின் பற்றாக்குறை ரூபா 9,278 பில்லியன் ஆக இருந்தது. அந்த பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன் மற்றும் வெளிநாட்டு மானியங்கள் பெறப்பட்டு இருந்தது. இதன் பிரகாரம் அந்தக் காலப் பகுதியில் உள்நாட்டுக் கடன் ரூபா 30,878 பில்லியனும், வெளிநாட்டுக் கடன் ரூபா 12,285 பில்லியனும் மற்றும் வெளிநாட்டு மானியம் ரூபா 331 பில்லியனும் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 43,494 பில்லியன் பெறப்பட்டிருந்தது. ஒவ்வொரு ஆண்டின் போதும் அவ்வாறு பெறப்பட்ட கடன் மற்றும் மானியங்களில் 4.44 சதவீதம் முதல் 45.59 சதவீதம் வரையிலான வீச்சிலான சதவீதத்தின் மூலம் வருமானத்தின் பற்றாக்குறை நிதியீட்டம் செய்யப்பட்டிருந்தது. பெறப்பட்ட கடன் மற்றும் மானியங்களில் முதலீடு செய்யப்படாமல் மீண்டெழும் செலவீனத்தை தீர்ப்பதற்காக 2019 ஆம் ஆண்டின் போது 20.25 சதவீதமும், 2020 ஆம் ஆண்டின் போது 45.59 சதவீதமும், 2021 ஆம் ஆண்டின் போது 42.39 சதவீதமும், 2022 ஆம் ஆண்டின் போது 30.59 சதவீதமும், 2023 ஆம் ஆண்டின் போது 19.65 சதவீதமும் மற்றும் 2024 ஆம் ஆண்டின் போது 19.02 சதவீதம் ஆக பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது ரூபா 2,689 பில்லியன் வட்டி செலுத்தப்பட்டதுடன் அது மொத்த மீண்டெழும் செலவீனத்தில் 50 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியது. கடந்த ஆண்டில் வட்டி செலுத்துதல் ரூபா 2,455 பில்லியன் அதாவது மொத்த மீண்டெழும் செலவினத்தில் 51.91 சதவீதம் ஆக இருந்தது. வட்டி செலுத்துதல் கடந்த ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது ரூபா 234 பில்லியன் ஆல் அதிகரித்திருந்தது. மேலும் முன்னாள் நிதி, பொருளாதார உறுதிப்பாடு தேசிய கொள்கை அமைச்சின் மூலம் 2022 ஏப்ரல் 12 ஆம் திகதி விநியோகிக்கப்பட்ட இடைக்கால வெளிநாட்டுக் கடன் செலுத்துதல்

குறிப்பிட்டுக் கொள்கின்றோம். மேற்படி

தற்காலிகமாக நிறுத்தும் கொள்கை ரீதியான தீர்மானத்தின் பிரகாரம் 2022 ஏப்ரல் 13 ஆந் திகதி முதல் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் சில கடன் தவணைகள் மற்றும் வட்டி செலுத்துதல் கைவிடப்பட்டிருந்த போதும் அதற்குரியதாக செலுத்தப்பட்டிருக்கும் ஆயின் அந்த பற்றாக்குறை மேலும் அதிகரிக்கின்றமை அவதானிக்கப்பட்டது. எனினும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போது பெறப்பட்ட உள்நாட்டுக் கடனின் அளவு 62 சதவீதத்தால் குறைவடைந்திருந்த போதிலும் அதற்காக செலுத்தப்பட்ட வட்டி 49 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. 2006 ஆம் ஆண்டின் போது ரூபா 151 பில்லியன் ஆன வட்டிக் கொடுப்பனவுகள் 2024 ஆம் ஆண்டு வரையில் அது ரூபா 2,689 பில்லியன் வரை 1681 சதவீதத்தல் அதிகரித்திருந்தது. வரவு செலவு திட்ட பற்றாக்குறையை நிதியீட்டம் செய்வதற்காக கடன் பெற்றுக் கொள்ள வேண்டி ஏற்பட்டதுடன் அதற்கான வட்டி செலுத்துதல் வருடாந்தம் அதிகரித்திருந்தது. 2024 ஆம் ஆண்டின் போது பாதீட்டு செயலாற்றல் மற்றும் பற்றாக்குறை நிதியீட்டம் கூற்றின் பிரகாரம் சேகரிக்கப்பட்ட ரூபா 4,061 பில்லியன் அரசாங்கத்தின் வருமானத்தில் ரூபா 2,689 பில்லியன் அதாவது 66.21 சதவீதம் வட்டி செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது.

(இ) வருமானம் சேகரிக்கின்ற பிரதான நிறுவனமான உள்நாட்டு இறைவரித் திணைக்களம், இலங்கை சுங்கம், மதுவரித் திணைக்களம் மற்றும் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்திற்கு உரிய மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு நிலுவை வருமான மீதியின் கூட்டுமொத்தம் ரூபா 1,217 பில்லியன் ஆக இருந்தது.

இந்த நிறுவனங்களின் நிலுவை வருமானத்தை சேகரித்தல் மற்றும் அதன் செயல்முன்னேற்றம் தொடர்பாக திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் செயற்பாடுகளில் மாதாந்தம் நடாத்தப்படுகின்ற வருமான முகாமைத்துவம் மற்றும் நிதிப் பாய்ச்சல் தொடர்பான கூட்டங்களின் போது விசேட கவனம் செலுத்தப்படுகின்றது. எனினும் 2015.07.20 ஆம் திகதிய அரச நிதிக் கொள்கை சுற்றறிக்கை 01/2015 இன்

மேற்படி

		பிரகாரம் நிலுவை வருமானம் சேகரிக்கும் பொறுப்பு உரிய கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. அதனால் அந்த நிறுவனங்கள் தொடர்பான நிலுவை வருமானம் சேகரிக்கும் பொறுப்பும் அந்த நிறுவனத்தின் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கே கையளிக்கப்பட்டுள்ளது.	
(ஈ)	வரி நிர்வாக வருமான முகாமைத்துவ தகவல் முறைமையில் காணப்படுகின்ற குறைபாடுகள், நிலுவை வரி முறைப்பாடு செயற்பாடுகள் நீண்டகால தன்மையுடன் காணப்படுகின்றமை, நிலுவை வரி அறவிடல் தொடர்பாக நீதிமன்ற நடவடிக்கைகளை அமுல்படுத்துவதற்கு விசேட நீதிமன்ற முறைமை ஒன்று ஸ்தாபிக்காமை போன்ற காரணங்கள் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் நிலுவை வருமானத்தை அறவிடுவதன் தாமதத்திற்கு தாக்கம் அளித்திருந்தது.		
(உ)	மிகவும் சரியான முறையில் வருமான மதிப்பீடு தயாரிக்காமை அல்லது தயாரிக்கப்பட்ட வருமான மதிப்பீட்டின் பிரகாரம் வருமானம் சேகரிக்கப்படாமை சிக்கனமாக செலவின முகாமைத்துவம் செய்யப்படாமையினால் அரச கடன் பெற்றுக்கொள்ள வேண்டி ஏற்பட்டிருந்தது. அந்த கடன் பெறுதல் வருடாந்தம் அதிகரித்தமையால் கடன் வட்டிக் கிரயம் வருடாந்தம் அதிகரித்தன் காரணமாக மீண்டெழும் செலவினமும் அதிகரித்திருந்தது. மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் சேகரிப்பதற்கு முடியாதிருந்தமையும் மீண்டெழும் செலவினங்கள் அதிகரித்தமையால் வருடாந்த செலவினங்களைத் தீர்த்து வைப்பதற்கு வருமானம் போதியளவில் இல்லாமையினால் வருமானப் பற்றாக்குறை வருடாந்தம் அதிகரித்திருந்தது.	பொருளாதார நெருக்கடி நிலைமைக்கு உட்பட்ட மக்களுக்கு பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புதல் ஆக்கபூர்வமானதாக இல்லாது இருந்த அரச செலவினங்களை குறைத்து அதிக அளவில் அரச நிதி முகாமைத்துவத்தை செயற்படுத்துதல் தொடர்ச்சியாக அமுல்படுத்தியதன் விளைவாக பொருளாதார வகைப்படுத்தலின் பிரகாரம் 2024 ஆம் ஆண்டிற்காக அரசாங்கத்தின் மொத்த வருமான மதிப்பீட்டில் (வரி வருமானம், வரியல்லா வருமானம் மற்றும் வெளிநாட்டு மாணியங்களுடன் 99.1 சதவீதமாக மிகவும் உயர்ந்த செயலாற்றலைக் காண்பித்ததுடன் 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது அரசாங்க வருமானம் 33.1 சதவீதத்தால் அதிகரித்து இருந்தது. விசேடமாக மொத்த உள்நாட்டு உற்பத்தியின்	மேற்படி

சதவீதமாக கவனத்தில் கொள்ளும் போது அண்மைய வரலாற்றில் அதிக பெறுமதியான 13.7 சதவீதத்தைப் பெற்றுக் கொள்ளல் அரசாங்கத வருமானத்தின் செயலாற்றலின் விசேடமான அம்சமாகும். எனினும் அரச ஊழியர் சம்பள திருத்தம், ஓய்வூதியம் செலுத்துதல், ஆபத்துக்கு உட்பட்டக் கூடிய பொருட்களைப் பாதுகாப்பதற்கான நலன்புரி நிகழச்சித் திட்டங்களை அமுல்படுத்துதல், பொருட்கள் மற்றும் சேவை விலைகள் உயர்வடைந்தமை, அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்கு அப்பால் உள்ள அரச கடன் வட்டி செலுத்துதல் போன்றவற்றின் காரணமாக மீண்டெழும் செலவினம் 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 13.6 சதவீதத்தால் அதிகரித்து இருந்தது. இந்த செலவினம் அரச சேவையை தொடர்ச்சியாக கொண்டு செல்வதற்காக நாட்டின் சுதந்திர கல்வி சுகாதாரம் போன்ற நலன்புரி நிகழச்சித் திட்டங்கள் மற்றும் ஆபத்துக்கு உட்படக் கூடிய மனித வளத்தை பாதுகாக்கும் நிகழ்ச்சித் திட்டத்தில் புதிய அத்தியாயம் ஒன்றை அமுல்படுத்துதல் நாட்டின் அபிவிருத்தி செயற்பாடுகளை நடாத்திச் செல்லுதல் போன்றவற்றின் காரணமாக அரசாங்கத்தின் செலவினம் 14.5 சதவீதத்தால் அதிகரித்து இருந்தது. அதானல் அரசாங்க வருமானத்தில் இருந்து மாத்திரம் வருமான பற்றாக்குறையை அதிகரிப்பதைத் தவிர்த்தல் நடைமுறையில் சவாலாக இருந்தது.

4.3 வரவு செலவுத்திட்ட பற்றாக்குறை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
அரசின் நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் 2024 ஆண்டில் பாதீட்டு நிலுவை ரூபா 2,126 பில்லியனாக இருந்ததுடன் அது மொத்த தேசிய உற்பத்தியின் 7.11 சதவீதமாக இருந்தது. 2023 ஆண்டின் பாதீட்டு நிலுவை ரூபா 2,584 பில்லியனாக இருந்ததுடன், அது மொத்த தேசிய உற்பத்தியின் 9.35 சதவீதமாக இருந்தது. 2006 ஆண்டு முதல் 2024 ஆண்டு வரை மொத்த கால வீச்சளவு பூராவும் பாதீட்டு நிலுவையொன்று நிலவியதுடன், அது 2006 ஆண்டில் நிலவிய ரூபா 300 பில்லினான பாதீட்டு நிலுவை 2024 ஆண்டளவில் ரூபா 2,126 பில்லியன் வரை அதிகரித்திருந்தது. அக்கால வீச்சளவில் உச்ச பாதீட்டு நிலுவை 2023 ஆண்டில் அறிக்கையிடப்பட்டிருந்தது. 2006 ஆண்டு முதல் 2024 ஆண்டு வரை பாதீட்டு நிலுவை மொத்த தேசிய உற்பத்தியின் சதவீதமாக எடுக்கும் போது அது 5.55 சதவீதம் முதல் 14.08 சதவீதம் வரையான வீச்சளவில் நிலவியது. 2003 இன் இலக்கம் 3 கொண்ட நிதி முகாமைத்துவ (பொறுப்பு) சட்டத்தின் 3(அ) பிரிவின் பிரகாரம் உள்ளவாறான பாதீட்டு நிலுவை உள்ளவாறான மொத்த தேசிய உற்பத்தியின் சதவீதமாக காணப்பட வேண்டியிருந்த 5 சதவீத எல்லை அக்காலப் பகுதியினுள் எந்தவொரு ஆண்டினும் பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. 2016, 2017 மற்றும் 2018 ஆண்டுகளில் முறையே 5.55 சதவீதம், 5.69 சதவீதம் மற்றும் 5.59 சதவீதமான அளவில் பேணிக்கொள்ள முடியுமாக இருந்தது.	பதிலளிக்கப்படவில்லை.	உரிய சட்ட ரீதியான ஏற்பாடுகளுக்கு இணங்கி பாதீட்டு நிலுவையைக் குறைத்தல் வேண்டும்.

4.4 வரி முறைப்பாட்டு நடவடிக்கைகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
2025 சனவரி 31 ஆந் திகதி வரை வரி முறைப்பாட்டு ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டிருந்த போதும் தீர்வு வழங்கப்படாது இருந்த முறைப்பாடுகள் 506 காணப்பட்டதுடன் அதில் சர்ச்சைக்குரிய மொத்த வரிப் பெறுமதி ரூபா 110,395 மில்லியன் ஆகக் காணப்பட்டது.	2011 மே மாதம் வரி முறைப்பாட்டு ஆணைக்குழு ஸ்தாபிக்கப்பட்டதுடன் முறைப்பாடுகளை விசாரணை செய்யும் நடவடிக்கைகள் 2012 மார்ச் மாதத்தில் இருந்தோ	வரி முறைப்பாடுகள் தொடர்பாக நடவடிக்கைகளை துரிதப்படுத்தி பூர்த்தி செய்யக் கூடிய பொறி முறை ஒன்றை

இதில் ரூபா ஒரு பில்லியனை விஞ்சுகின்ற ரூபா 70,494 மில்லியனை ஆன 29 முறைப்பாடுகள் மற்றும் ரூபா 100 மில்லியனுக்கும், ரூபா 1,000 மில்லியனுக்கும் இடையிலான ரூபா 33,096 மில்லியன் ஆன 107 முறைப்பாடுகள் என்பன உள்ளடக்கி இருந்தன. 2011 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரையும் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும் எந்த ஒரு விசாரணையும் ஆரம்பிக்கப்படாத வரிப் பெறுமதி ரூபா 3,408 மில்லியன் ஆன 27 முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்ட போதும் மேலும் தீர்வு வழங்கப்படாது இருந்த ரூபா 106,990 மில்லியன் ஆன 483 முறைப்பாடுகள் உள்ளடக்கி இருந்தன. மேலும் 2022 ஆம் ஆண்டில் இருந்து 2025 சனவரி 28 ஆம் திகதி வரையான காலத்தில் முறைப்பாடுகளின் விசாரணை முடிவடைந்த போதும் இறுதித் தீர்வு வழங்கப்படாத 'Reserved Cases' 233 காணப்பட்டதுடன், அதற்குரிய வரித் தொகையின் பெறுமதி ரூபா 36,514 மில்லியன் ஆகும். இவ்வாறு வரி முறைப்பாடுகளைத் தீர்க்கும் செயற்பாடுகளில் இறுதிக் கட்ட நடவடிக்கைகள் நீண்டகாலம் பூர்த்தி செய்யப்பட்டாமையால் அரசாங்கத்திற்கு பெறக்கூடியதாக இருந்த வருமானத்தை சேகரித்தலில் கவனத்தில் கொள்ளக் கூடிய தாமதம் ஏற்பட்டமை மற்றும் அதன் காரணமாக அரசாங்கத்திற்கு தேவையற்ற நேர் மற்றும் நேரில் கிரயங்களை செய்ய வேண்டி ஏற்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.	ஆரம்பிக்கப்பட்டிருந்தது. ஆணைக்குழு ஸ்தாபிப்பதற்கு முன்னர் காணப்பட்ட முறைப்பாடு செயற்பாடுகளின் கீழ் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் காணப்பட்ட மீளாய்வு சபையில் (Board of Review) கையேற்ற 71 முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்காக இந்த ஆணைக்குழுவிற்கு கையளிக்கப்பட்டிருந்தது. 2011 இன் 23 ஆம் இலக்க வரி முறைப்பாட்டு ஆணைக்குழு சட்டம் 2013 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களின் பிரகாரம் குறித்துரைத்த சபை மூன்றிணை நடாத்திச் செல்வதற்கு ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருந்த போதிலும் 2019 ஆம் ஆண்டு வரையும் அங்கத்தவர்கள் மூன்று பேர்களை உடைய ஒரு நியாய சபையாக ஆணைக்குழு செயற்பட்டு இருந்தது. அந்தக் காலத்திலும் 2019 முதல் 2022 வரை மூன்று வருட கால எல்லையின் இறுதியின் போது புதிய அங்கத்தவர்களை நியமித்தல் உரிய பிரகாரம் மேற்கொள்ளாமையின் காரணமாக முறைப்பாடுகளை விசாரணை நடவடிக்கைகளும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படவில்லை.	தயாரித்தல் வேண்டும்.

4.5 கடன் மீதி அதிகரித்தல்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
வருடாந்த வரவுசெலவுத்திட்ட பற்றாக்குறை வருடாந்தம் அதிகரித்தலின் காரணமாக கடன் பெற்றுக் கொள்ளும் அளவும் அதிகரித்திருந்தது. அரச நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2024 ஆண்டு இறுதியளவில் அரசினால் செலுத்த வேண்டிய கடன் மீதியாக	பதிலளிக்கப்படவில்லை.	குறித்துரைத்த ஏற்பாடுகளுக்கு இணங்க பொறுப்புக்களைப் பேணிச் செல்லல் வேண்டும்.

ரூபா 29,627 பில்லியனாக காணப்பட்டது. அம் மீதி தேசிய கடனாக ரூபா 18,893 பில்லியனும், வெளிநாட்டுக் கடனாக ரூபா 10,734 பில்லியனாகவும் காணப்பட்டது. 2023 ஆண்டில் அரச கடன் மீதி ரூபா 29,150 பில்லியனாக இருந்தது. அதன் பிரகாரம் 2023 ஆண்டிற்கு ஒப்பாக 2024 ஆண்டில் கடன் மீதி ரூபா 478 பில்லியனினால் அதாவது 1.6 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. 2006 ஆண்டில் காணப்பட்ட ரூபா 2,431 பில்லியனான கடன் மீதி மொத்த தேசிய உற்பத்தியின் 82.72 சதவீதமாக இருந்ததுடன் அது 2024 ஆண்டிறுதியளவில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 94.39 சதவீதமாக இருந்தது. மேலும் 2013 இன் 15 இலக்க அரச நிதி முகாமைத்துவ (பொறுப்பு) சட்டத்தின் 3(ஊ) பிரிவு பிரகாரம் அரச பொறுப்புக்கள் மொத்த தேசிய உற்பத்தியின் 80 சதவீதத்திலும் குறைவாக இருக்க வேண்டிய போதும் ஏனைய பொறுப்புக்கள் தவிர அரச கடன் பொறுப்பு மாத்திரம் அவ் எல்லையை விஞ்சி 94.39 சதவீதமாக இருந்தது. அந் நிலைமை 2020, 2021, 2022 மற்றும் 2023 ஆண்டுகளிலும் நிலவியது.

4.6 அரச கடன்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2024 ஆம் ஆண்டிற்குரிய எதிர்பார்க்கப்பட்ட மதிப்பீடு மற்றும் உள்ளபடியான மதிப்பீட்டுப் பெறுமதி பின்வருமாறு இருந்தது.		

அபிவிருத்தி தரப்பினர்	எதிர்பார்க்கப்பட்ட மதிப்பீட்டு மானியத்தை உள்ளடக்கி 2024 (ஐ.அ. டொலர். மில்லியன்)	உள்ளபடியான எதிர்பார்க்கப்பட்ட பெறுமதி மானியத்தை உள்ளடக்கி 2024 (ஐ.அ. டொலர் மில்லியன்)	முரண்கள் (ஐ.அ. டொலர் மில்லியன்)	முரண்கள் எதிர்பார்க்கப்பட்ட மதிப்பீட்டின் சதவீதமாக (%)

---------------	--------	-----------	-----------	-----------
உலக வங்கி	397	564.9	167.9	42
ஆசிய அபிவிருத்தி வங்கி	600	862.1	262.1	44
சீனா	281	51.9	(229.1)	(82)
யப்பான்	59	37.3	(21.7)	(37)
கொரியா	39	4.3	(34.7)	(89)
மத்திய கிழக்கு ஆசிய நாடுகள்	83	39.3	(43.7)	(53)
தெற்காசிய நாடுகள்	124	-	(124)	(100)
ரஸ்யா, அவுஸ்திரேலியா மற்றும் மேற்கத்திய நாடுகள்	122	7.94	(114.06)	(93)
IFDA உள்ளடக்கி ஐக்கிய நாடுகள் முகவர் நிறுவனங்கள்	48	16.4	(31.6)	(66)
சர்வதேச நாணய நிதியம்	0	334	334	100
	--------	--------	---------	
மொத்தம்	**1,753**	**1,918**	**165.1**	
	===	====	====	

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(i) 2024 ஆண்டு எதிர்பார்க்கப்பட்ட மதிப்பீட்டின் மொத்த பெறுமதி ஐ.அ.டொலர் 1,753 மில்லியனான போதும், உள்ளபடியான எதிர்பார்க்கப்பட்ட பெறுமதி ஐ.அ.டொலர் 1,918 மில்லியன் ஆனமையின் காரணமாக உள்ளவாறான எதிர்பார்க்கப்பட்ட பெறுமதி, எதிர்பார்க்கப்பட்ட மதிப்பீட்டை விட ஐ.அ.டொ. 165.1 மில்லியனால் அதாவது, 9 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

ஒவ்வொரு வருடமும் உரிய எதிர்பார்க்கப்பட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு முன்னைய ஆண்டில் இரண்டாவது காலாண்டில் இரண்டாவது காலாண்டிலேயே தயாரிக்கப்படுகின்றது. அதனை மதிப்பீடு செய்யும் போது உரிய ஒவ்வொரு அபிவிருத்தி தரப்பினருக்கும் உரிய செயற்திட்டத்திற் காக எதிர்வரும் ஆண்டில் எதிர்பார்க்கப்பட்ட தகவல்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

		எதிர்பார்க்கப்பட்ட மதிப்பீடு தொடர்பாக கவனத் தற்கொள்ளப்படுகின்றது. எனினும் ஆண்டிற்குரிய உள்ளபடியான மதிப்பீடு, செயற்திட்டத்தை அமுல்படுத்துகின்ற போது ஏற்படுகின்ற விலை தளம்பல் களின் அடிப்படையில் செயற்திட்டக் கிரயம் மாற்றமடைகின்றமை மற்றும் அந்நியச் செலாவணி விகிதம் மாற்றமடைதல் போன்ற காரணங்களினால் வேறுபடுகின்றது. அவ்வாறே பல் வேறு சந்தர்ப்பங்களின் போது செயல் திட்டத்தை அமுல்படுத்தலின் வேகத்தின் அடிப்படையிலும் உள்ளபடியான மீள் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியினை விட வேறுபடுகின் றது.	
(ii)	உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி என்ற தரப்பினர்களிடம் இருந்து பெறப்பட்ட கடன்களின் உள்ளபடியான மதிப்பிடப்பட்ட பெறுமதி மதிப்பீட்டுடன் ஒப்பீடு செய்யும் போது முறையே 42 சதவீதம் மற்றும் 44 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.	உலக வங்கியின் மூலம் அமுல்படுத் தப்படுகின்ற செயற் திட்டங்களுக்காக 2024 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்பட்ட மதிப்பீடுகள் 2024 ஆம் ஆண்டிற்காக எதிர்வுகூறப்பட்ட வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டிருந்தது. அது அண்ணளவாக டொலர் 397 மில்லியன் ஆகும். சர்வதேச நாணய நிதியம் விரிவாக்கல் வசதிகளுக்கு இணையாக உலக வங்கியின் மூலம் பாதீட்டு நிலுவை தீர்த்து வைப்பதற்காக அண்ணளவாக டொலர் 200 மில்லியன் தொகை 2024 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருந்தது. அது எதிர்வு கூறலுக்காக உள்ளடக்கப்பட வில்லை. அவ்வாறே ஆசிய அபிவிருத்தி வங்கி இலகு நிதி வளத் தொகுதியொன்றில் மேலும் வழங்க வேண்டியிருந்த நிதி ஏற்பாடு காணப்பட் டதன்	மேற்படி

		அடிப்படையிலும், இலங்கையிலும் பாதீட்டு உதவி நிதி ஏற்பாடு தேவை காணப்பட்ட மையால் பாதீட்டு உதவி நிதி ஏற்பாடு பெறப்பட்டிருந்தது.	
(iii)	சீனா, ஜப்பான், கொரியா, மத்திய கிழக்கு நாடுகள், IFAD உள்ளடக்கிய ஐக்கிய நாடுகளின் முகவர் நிறுவனங்கள் மற்றும் ரஷ்யா, அவுஸ்ரேலியா மற்றும் மேற்கத்திய நாடுகளில் இருந்து பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட கடன் முறையே 82, 37, 89, 53, 66 மற்றும் 93 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.	இலங்கை அரசாங்கத்தினால் கடன் தவணைப் பணம் செலுத்துதல் தற்காலிகமாக கைவிடப்பட்டமை யால் சீனா, ஜப்பான், கொரியா, ரஷ்யா, மற்றும் அவுஸ்திரேலியா என்ற நாடுகள் கடன் மீளளிப்பை நிறுத்தியிருந்ததுடன் மதிப்பீடு தயாரிக்கும் போது 2024 ஆம் ஆண்டில் மீண்டும் தேறக் கூடியவைகள் ஆரம்பிக்கப்படுகின்ற எண்ணக்கருவின் அடிப்படையில் ஸ்தாபிக்கப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.	முறையான பிரகாரம் திட்டமிடலுடன் வெளிநாட்டுக் கடன் நிதியீட்டம் செய்யப்படல் வேண்டும்.
(iv)	மீளாய்வாண்டின் போது தெற்காசிய நாடுகளில் இருந்து கடன் பெற்றுக் கொள்வதற்கு மதிப்பீடு செய்யப்பட்ட போதும் ஆண்டின் இறுதி வரையிலும் கடன் பெறப்பட்டிருக்கவில்லை.	2024 ஆம் ஆண்டில் காணப்பட்ட பொருளாதார வீழ்ச்சி மற்றும் அரசாங்கத்தின் கடன் கொள்கையின் அடிப்படையில் மற்றும் கடன் மீள் கட்டமைப்பு செயற்பாடுகள் முடிவடையாதிருந்தமையால் கடன் பெற்றுக்கொள்ளப்பட வில்லை.	மேற்படி
(v)	மீளாய்வாண்டின் போது சர்வதேச நாணய நிதியத்தில் இருந்து ஐ.அ. டொலர் 334 மில்லியன் எதிர்பாரப்பு காணப்பட்ட போதிலும் எதிர்பார்க்கப்பட்ட மதிப்பீட்டின் பிரகாரம் சர்வதேச நாணய நிதியத்தில் இருந்து (IMF) எந்த ஒரு எதிர்பார்க்கப்பட்டவைகள் கிடைத்தமைக்காக மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	சர்வதேச நாணய நிதியக் கடன் பெற்றுக்கொள்ளல், நிதியமைச்சு மற்றும் சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்படுத்தப்பட்ட இணக்கப்பாட்டின் அடிப்படையில் தீர்மானம் எடுக்கப்பட்டது. வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் மூலம் மேற் கொள்ளப்படுகின்ற அபிவிருத்தி	மேற்படி

	செயற்திட்டங்களுக்கான எதிர்பார்க்கப்பட்ட மதிப்பீடு செய்யும் போது அந்தப் பெறுமதி உள்ளடக்கப்பட வில்லை.	

4.7 இலாபம் மற்றும் பங்கிலாபம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்களில் அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழில் முயற்சிகளின் மூலதனப் பங்களிப்பு ரூபா 2,493,232 மில்லியன் ஆக இருந்த போதிலும் அந்த முதலீட்டுக்காக மீளாய்வாண்டில் ரூபா 41,080 மில்லியன் இலாபம் மற்றும் பங்கிலாபம் கிடைத்திருந்தது. அதில் மேற்கொள்ளப்பட்டிருந்த முதலீட்டுப் பெறுமதியில் 1.6 சதவீதம் ஆகும்.	ஏற்றுக்கொள்கின்றோம்.	பொது முயற்சிகளை மேற்பார்வை செய்தல் மற்றும் ஒழுங்குபடுத்துதலை முறைமைப் படுத்தல் வேண்டும்.
(ஆ)	2024 ஆம் ஆண்டிற்காக இலாப வருமானத்திற்காக மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா 64,192 மில்லியனாக இருந்ததுடன் உள்ளபடியான வருமானம் ரூபா 33,191 மில்லியன் ஆனதன் காரணமாக அது மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தில் 51 சதவீதம் மாத்திரம் ஆக இருந்தது.	ஏற்றுக்கொள்கின்றோம்.	மேற்படி
(இ)	2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொது முயற்சிகள் திணைக்களத்தின் மேற்பார்வைக்கு உட்படுத்தப்பட்ட அரசுக்குச் சொந்தமான தொழில் முயற்சிகள் மற்றும் ஏனைய நிறுவனங்களின் எண்ணிக்கை 305 ஆக இருந்த போதிலும் அதில் 73 நிறுவனங்களுக்காக மாத்திரம் வருமான மதிப்பீடு தயாரிக்கப்பட்டதுடன் அதில் 43 நிறுவனங்களில் இருந்து மாத்திரம் இலாபம் மற்றும் பங்கிலாபம் திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.	வருமான மதிப்பீடு தயாரிக்கும் போது இலாபம் பெறுகின்ற நிறுவனங்களை கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தமை அறிவிக்கப்பட்டிருந்ததுடன் அவ்வாறு மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட்ட நிறுவனங்களும் வருடாந்தம் உள்ளபடியான நிதி நிலமை அடிப்படையாகக் கொண்டு முரண்பாடுகள் ஏற்படும் சந்தர்ப்பங்கள்	அரச பொது முயற்சிகளை மேற்பார்வை செய்தல் மற்றும் ஒழுங்குபடுத்துதலை முறயையாக மேற்கொள்ள வேண்டியிருந்ததுடன் பொது முயற்சிகள் திறைசேரி பிரதிநிதிகளின் பணிப் பொறுப்புக்களை மேலும் முறைமைப்படுத்துவதற்

		காணப்படுகின்றமையால் மதிப்பீடு செய்யப்பட்ட பிரகாரம் இலாப பங்கு வருமானத்தை பெற்றுக் கொள்ள முடியாது இருந்தது.	கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	2021 நவம்பர் 16 ஆந் திகதிய பொது முயற்சிகள் திணைக்களத்தால் விநியோகிக்கப்பட்ட பொது முயற்சிகளுக்கான செயற்பாட்டுக் கைநூலின் 5.3 ஆம் பந்தியின் பிரகாரம் 2007 இன் 07 இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதும் காட்டப்பட்டிருந்தமை உறுதிப்படுத்துகின்ற அரச கம்பனிகளில் வரிக்கு பின் இலாபம் ஆகக் குறைந்தது 30 சதவீதம் திரண்ட நிதியத்திற்கு அனுப்ப வேண்டியிருந்த போதிலும் அதற்கு முரணாக மீளாய்வாண்டின் போது 11 அரச கம்பனிகளுக்குரிய 2023 ஆம் ஆண்டின் இலாபப் பங்குகளில் கூட்டுமொத்தமாக ரூபா 13,010 மில்லியன் ஆன பங்கிலாப வருமானம் சேர்ப்பதற்கு தவறியிருந்தது.	ஏற்றுக் கொள்கின்றோம். இந்த நிறுவனங்களின் நிதி நிலமை மற்றும் எதிர்வரும் வியாபார திட்டங்களைக் கவனத்திற் கொண்டு எதிர்காலத்தில் இலாபப் பங்கை சேகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது எனக் குறிப்பிடுகின்றோம்.	உரிய இலாப பங்கை சரியாகத் திறைசேரிக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல் மிகவும் சரியானதாக ஒழுங்கமைத்தல் வேண்டும்.

4.8 திறைசேரி பிணைமுறி மற்றும் சலுகைக் கடிதம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2024 ஆம் ஆண்டில் மற்றும் அதற்கு முன்னர் காலாவதியாகியதன் அடிப்படையில் ரூபா 143,094 மில்லியன் மற்றும் அ.டொலர் 2.678.29 கூட்டுப் பெறுமதி உடைய 25 திறைசேரிப் பிணைமுறிகள் மற்றும் ரூபா 32,550 மில்லியன் மற்றும் அ.டொலர் 210 பெறுமதி உடைய 15 சலுகைக் கடிதங்களுக்கு 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் மீண்டும் செல்லுபடிக்காலம் நீடிக்கப்பட்டிருந்தது.	2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் மீண்டும் நீடிக்கப்பட்ட சலுகைக் கடிதங்களின் எண்ணிக்கை 15 ஆகும்.	எதிர் காலத்தில் திறைசேரி பிணைமுறி மற்றும் சலுகை கடிதம் விநியோகிக்கும் போது உரிய மேற்பார்வையின் கீழ் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் வெளிநிறுவனங்களுக்கு 11 சந்தர்ப்பங்களின் போது விநியோகிக்கப்பட்ட ரூபா 102,424.21	உரிய திறைசேரி பிணை முறி மற்றும் சலுகைக் கடிதங்களுக்கு உரிய செல்லுபடிக்காலம் 2025 மே	மேற்படி

	மில்லியன், அ.டொலர் 2,824.31 மில்லியன் மற்றும் யூரோ 12.29 மில்லியன் பெறுமதியான திறைசேரி பிணைமுறி மற்றும் 17 சந்தர்ப்பங்களின் போது விநியோகிக்கப்பட்ட கூட்டுப்பெறுமதி 33,430 மில்லியன் மற்றும் அ.டொலர் 210 பெறுமதியான சலுகைக் கடிதங்கள் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் காலாவதியாகி இருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் உரிய செல்லுபடிக் காலத்தை விஞ்சுவதற்கு முன் முறையான பிரகாரம் முடிவுறுத்துவதற்கு அல்லது செல்லுபடிக் காலத்தை நீடிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	20 ஆந் திகதி வரையில் நீடித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமை தொடர்பாக தற்போதய நிலைமையை தெளிவுபடுத்திய அவதானிப்புக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.	
(இ)	ஜெனரல் சீறிமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக வைத்தியசாலை நிர்மாணித்தல் மற்றும் மருத்துவ உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக ஜெனரல் சீறிமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தால் தேசிய சேமிப்பு வங்கியில் இரந்து பெறப்பட்ட கடன் தொகையில் 2024 மார்ச் மாதத்திற்குரிய நிலுவையாகக் காணப்பட்ட கடன் தவணைப் பணம் மற்றும் வட்டியைத் தீர்ப்பதற்காக ரூபா 2,200 மில்லியனும், வரையறுக்கப்பட்ட சிறிலங்கன் விமான சேவைக் கம்பனியால் இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கிக்கு செலுத்த வேண்டியதாகக் காணப்பட்ட நிலுவைக் கடன் மற்றும் வட்டி செலுத்துவதற்காக அ.டொலர் 8 மில்லியனுக்கு சமமான ரூபா 2,400 மில்லியனும் செலுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது திறைசேரி பிணைமுறி மற்றும் சலுகைக் கடிதம் விநியோகித்ததன் காரணமாக கூட்டுமொத்தமாக ரூபா 4,600 மில்லியன் தொகை நிலுவைக் கடன் மற்றும் வட்டி மீதிகளைத் தீர்ப்பதற்காக பொதுத் திறைசேரிக்கு செலவிட வேண்டியிருந்தமை அவதானிக்கப்பட்டது.	அமைச்சரவைக் குறிப்பின் அடிப்படையில் அமைச்சரவைத் தீர்மானத்தின் படி இலங்கை விமானக் கம்பனியால் இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கிக்கு செலுத்த வேண்டிய கடன் மற்றும் கடன் வட்டிக்காக ரூபா 2,400 மில்லியன் செலுத்தப்பட்டுள்ளதுடன் சிறிமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தால் தேசிய சேமிப்பு வங்கிக்கு செலுத்த வேண்டிய கடன் மற்றும் கடன் வட்டிக்காக ரூபா 2,200 மில்லியன் செலுத்தப்பட்டள்ளது.	மேற்படி

4.9 உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மானியம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டிற்கு முன்னர் 07 மானியம் வழங்குநர்களிடமிருந்து 13 செயற்திட்டங்களுக்குரியதாக கிடைக்கப்பெற்ற போதும் உரிய நோக்கங்களுக்கு ஈடுபடுத்தப்படாமல் மீளாய்வாண்டில் மானியதாரருக்கு மீள அனுப்பப்பட்டிருந்த மானியங்களின் கூட்டுப்பெறுமதி ரூபா 326.6 மில்லியன் ஆகும்.	உலக உணவு நிகழச்சித் திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்ட சில நிகழச்சித் திட்டங்களுக்கு கிடைக்கப் பெற்ற மொத்த தொகையும் உரிய நிகழச்சித் திட்டங்களை அமுல்படுத்தாமை மற்றும் ஏனைய செயற்திட்டங்களை அமுல்படுத்தியதன் பின்னர் அந்த ஒவ்வொரு செயற்திட்டத்திலும் சேமிக்கப்பட்ட தொகை மாணிய தாரரின் கோரிக்கை , வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் இணக்கப்பாடு மற்றும் உரிய செயல் திட்டத்தை அமுல்படுத்துகின்ற நிறுவனத்தின் கோரிக்கையின் அடிப்படையில் உடன்படிக்கையின் பிரகாரம் பங்களிப்பு நிறுவனத்திற்கு மீள அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	கிடைக்கப் பெற்ற வெளிநாட்டு மானியங்களை உச்ச அளவில் பயன்படுத்துதல் வேண்டும்.
(ஆ)	2024 சனவரி 01 ஆம் திகதி வரையில் உள்நாட்டு மானியமாக கிடைக்கப்பெற்ற ரூபா 146.5 மில்லியன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் உரிய நோக்கங்களுக்கு ஈடுபடுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.	இந்த உள்நாட்டு மாணிய வைப்புப் பணம் உரிய விடயங்களுக்கு பயன்படுத்துமாறு இந்த திணைக்களத்தால் உரிய அமைச்சுக்கள் / திணைக்களங்களுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	கிடைக்கப் பெற்ற வெளிநாட்டு மானியங்களை உச்ச அளவில் பயன்படுத்துதல் வேண்டும்.
(இ)	மாகாண சபைகளுக்குரிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது 09 மாகாணங்களுக்கு அரசாங்கத்தின் மானியமாக ரூபா 428,331 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. அரசாங்கத்தின் மானியம் தவிர அந்த மாகாண சபையினால் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 93,077 மில்லியன் ஆக காணப்பட்டதுடன் அதில் ரூபா 8,355 மில்லியன் முதலீட்டு வருமானமும் உள்ளடக்கி இருந்தது. 2024 திசம்பர் 31 இல் உள்ளவாறு சகல மாகாண	மாகாண சபைகளுக்காக மானியங்களை வழங்கும் போது அரசியலைப்பு உறுப்புரையின் 154 ‘‘கீ’’ ஏற்பாடுகளின் பிரகாரம் நிதி ஆணைக்குழுவினால் அனுப்பப்படுகின்ற பரிந்துரைகளும், காணப்படுகின்ற நிதி தேவைகளின் எல்லையினையும் கவனத்தில் கொண்டு 2024 ஆம் ஆண்டிற்காக நிதியேற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளது.	மாகாண சபைகளுக்கு அரசாங்கத்தின் மானியமாக நிதியத்தை வழங்கும் போது அரசாங்கத்திற்கு ஏற்படுகின்ற ஒட்டுமொத்த கிரயம் தொடர்பாக முறையாக கவனத்தில்

சபைகளுக்கும் சொந்தமான காசு மற்றும் காசுக்கு சமமானவைகளின் கூட்டு மொத்தம் ரூபா 41,782 மில்லியன் ஆக காணப்பட்டதுடன் 05 மாகாண சபைகளுக்குச் சொந்தமான கூட்டுப் பெறுமதி ரூபா 67,511 மில்லியன் முதலீடு காணப்பட்டது. அதன் பிரகாரம் 09 மாகாண சபைகளுக்குச் சொந்தமான ரூபா 109,292 மில்லியன் உயர் திரவச் சொத்துக்கள் காணப்பட்டமையும் அதன் மூலம் உயர்ந்த முதலீட்டு வருமானம் உழைக்கப்பட்டமையும்
அவதானிக்கப்பட்டதுடன் அரசாங்கத்தால் பல்வேறு நிதி ஈட்டல் வழிகள் மூலம் பெறப்படுகின்ற நிதியம், மாகாண சபைகளுக்கு அரசாங்கத்தின் மானியமாக வழங்கும் போது இந்த நிலைமை மற்றும் ஒட்டுமொத்தமாக அரசாங்கத்திற்கு ஏற்படுகின்ற கிரயம் தொடர்பாக முறையாக கவனத்திற் கொள்ளப்பட்டிருந்ததா என கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களத்தின் தகவல்களின் படி மீளாய்வாண்டின் போது பொதுத் திறைசேரியால் 09 மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டிருந்த மானியத்தின் பெறுமதி ரூபா 439,383 மில்லியன் ஆனமையின் காரணமாக மாகாண சபைகளின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் காணப்பட்ட கூட்டு மானியப் பெறுமதிக்கிடையே ரூபா 11,052 மில்லியன் வேறுபாடு அவதனிக்கப்பட்டது.

கொள்ளல் வேண்டும்.